# குடும்பநலச்

# செய்திக்கதிர்





இந்திய அரசு நல்வாழ்வு—குடும்ப நலத்துறை அமைச்சகத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுக் கூட்டம் நடந்தபோது அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை, இந்திய அரசு நல்வாழ்வுத்துறை இராஜாங்க அமைச்சர் திரு. ஜகதாம்பியாதவ் பார்வையிடுகிறார். அமைச்சர் திரு. ஆர். சௌந்தரராசன் அவர்கள் விளக்கமளிக்கிறார். (கீழே) இந்திய அரசு நல்வாழ்வு—குடும்ப நலத்துறை அமைச்சகத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுக் கூட்டம்.









# மனக்கட்டுப்பாட்டால் எதையும் சாதிக்க முடியும்!

## தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள்

[சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழா மண்டபத்தில் 16—10—78-ஆம் நாள் தேசியக் குடும்ப நலத் திட்ட இருவார விழாவைத் துவக்கி வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றிய உரை.]

தேசியக் குடும்ப நலத் திட்ட இருவார விழாவில் கலந்து கொள்ளவும், விழாவைத் தொடங்கி வைக்கவும் வாய்ப்பினை நல்கிய நண்பர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காலையிலிருந்து இதுவரையிலும் மாவட்ட ஆட்சித்தலைவர்களுடைய கூட்டத்தில் கலந்துகொண்டு, எங்கே நேரம் கழித்து வந்துவிடுமோ என வந்தும், எந்தத் தவறான கருத்தும் கொள்ளாமல் அன்புள்ளம் கொண்டு மக்கள் இங்கே பெருந்திரளாகக் கூடி வரவேற்பது கண்டு, அதை எண்ணி எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

குடும்ப நலக் கருத்துக்களை வலியுறுத்தி, பல்வேறு பெரியவர்கள் சீர்திருத்தத் திருமணங்களில் எல்லாம் பேசியிருக்கிறார்கள். இங்கே குடும்ப நலத் திட்டக் கருத்துக்களோடு கூடிய பாடல்கள் இசையாகப் பின்னே தரப்பட விருக்கின்றன என்பது கேட்டு இன்புறுகின்றேன்.

குடும்ப நலத் திட்டம் பற்றி நான் சொன்னால் கொஞ்சம் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். குடும்பநலம், அறுவைச் சிகிச்சை, சிறுகுடும்ப நெறி இவைபற்றியெல்லாம் மக்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களை வாழ்வாங்கு வாழச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில், இப்படிப்பட்ட விழாக்கள் கொண்டாடப் படுகின்றன.

தெரியாத ஒன்றை, புரியாத ஒன்றை நாங்கள் சொல்லிவிடப் போவதாக நீங்களும் கருத மாட்டீர்கள். நானும் நம்பி விடமாட்டேன். ஏனெனில் நீங்கள் அறிந்திருக்கும் விஷயங்களை, உங்கள் அனுபவத்தில் கண்ட உண்மைகளை நாங்கள் நினைவூட்டுகிறோமே தவிர, அறிவுரைகூறி உங்களை ஏற்கச் செய்ய வேண்டும் என்ற கட்டாயத்தில் நீங்கள் இல்லை என்பதை நான் நன்றாக அறிவேன்.

எங்கு பார்த்தாலும் மக்கள் வேலையின்றி கஷ்டப் படுகின்றார்கள். ஏதோ வேலை கிடைத்து உழைத்தாலும் தேவையான அளவுக்கு வருவாய் இல்லை. அப்படி ஏதோ கொஞ்சம் வருவாய் வந்தாலும் அவசியத் தேவைகளுக்குரிய பண்டங்களின் விலை உயர்ந்திருக்கிறது. ஆகவே வாழ்க்கையில் பற்றாக்குறை. சூழ் நிலையில் பற்றாக்குறை. சுயதேவையில் பற்றாக்குறை. இப்படி மக்கள் கஷ்டப் படுகின்ற நிலையை நாம் காணுகின்றோம். தமிழகத்தில் ஆங்காங்கு வசிக்கும் மக்களிடையே காணுகின்றோம். மாநிலத்து மக்களின் கஷ்டங்களை அறிவோம். வெளி நாட்டு நிலைமைகளைப் பற்றி நாம் படித்துத் தெரிந்து கொள்கிறோம்.

### உள்ள உணர்வுகளை வார்த்தைகளாக்கி . . . . !

குடும்பநலம் என்று சொல்லும்போது நான் ஒன்றைக் கொஞ்சம் அழுத்தமாகச் சொல்ல விரும்புகின்றேன். தனி மனிதனுடைய நலம் என்று எடுத்துக்கொண்டு, அதற்கு எது ஒத்தது, ஒவ்வாதது என்பதை முன்னிலைப் படுத்திப் பார்த்தால், அதுவே, பல வினாக்கள் எழ அடிப்படையாக அமையும். 'நீ என்ன நினைக்கிறாய் உன் நலத்தைப் பற்றி?' என்ற அந்தக் கேள்வி நம் நெஞ்சைத் தொடும் ஒன்றாக உருவெடுத்து நிற்கும். பிறருக்கு உபதேசம் செய்வது எப்போதுமே யாருக்கும் எளிது. இப்படித்தான் பணத்தைச் சேர்த்து வைக்க வேண்டும்—இப்படித்தான் உடலைப் பாதுகாக்க வேண்டும்—இப்படித்தான் உடற் பயிற்சி செய்ய வேண்டும்—சிக்கனமாக வாழ்க்கை நடத்த வேண்டும் என்று நான் சொல்லி விடலாம். 'நீ எப்படியப்பா இருக்கின்றாய்'? என்று கேட்டால்தான் தெரியும்... எவ்வளவு செலவு செய்கிறேன்—எப்படி இருக்கிறேன்—



எளிமையாக இருக்கிறேனா, இல்லையா என்பது பற்றியெல்லாம் என் மனசாட்சியால் மட்டுந்தான் பதில் சொல்ல முடியும். அந்த நிலையில்தான், என் விருப்பத்தையல்ல, என் உள்ள உணர்வுகளை வார்த்தைகளாக்கி கருத்துக்களை உங்களுக்குச் சொந்தமாக்க வேண்டும் என்ற நினைப்பில் பேச்சைத் தொடருகின்றேன்.

## பெற்றோர் மனதில் அலைமோதும் ஆசைகள்!

ஒரு குழந்தை உறுதியாக—திடமாக வளர வேண்டுமென்றால் பெற்றெடுத்தவர்கள் பல்வேறு செயல் முறைகளைப் பின் பற்றியாக வேண்டும். குழந்தை பெறுவது இயற்கை என்று சொன்னாலும் சரி அல்லது விதி என்று சொன்னாலும் சரி அல்லது ஒரு விபத்து என்றாலும் சரி குழந்தை பிறந்து விடுகின்றது. பிறந்த குழந்தையை எப்படி வளர்க்கிறோம் என்பதில் பெற்றவர்கள் கொஞ்சம் அக்கறை காட்டுவார்களேயானால் இந்த நாட்டில் இவ்வளவு பெரிய நிகழ்ச்சிகளையெல்லாம் நடத்த வேண்டிய அவசியம் இருக்காது என்று நான் கருதுகின்றேன். ஒரு குழந்தை வளரும்போது அந்தக் குழந்தையைப் பற்றி பெற்றவர்களிடையே எத்தகைய ஆசைகள் அலை மோதிக் கொண்டிருக்கும் என்பது பற்றி நாம் எண்ணிப்பார்ப்பதில் தவறில்லை. எண்ணிப்பார்க்கும் போது கிடைக்கும் கருத்துக்கள் நம்மைச் சிந்திக்க வைக்கத் தவறுவதில்லை.

குழந்தை பிறந்ததும் தாயோ அல்லது தந்தையோ கற்பனைகளில் ஈடுபடுவதுண்டு. 'இந்தக் குழந்தை வளரும். படித்துப் பட்டம் பெறும். பட்டம் பெற்ற பிறகு ஒரு நல்ல பதவியிலே போய் உட்காரும். அந்தப் பதவி மூலம் கிடைக்கும் வருமானத்தை வீட்டிற்குக் கொண்டு வந்து கொடுத்து, வீட்டிலுள்ளவர்களைக் காப்பாற்றும். வயதான காலத்தில் நான் நிம்மதியாக இருப்பேன்', என்றெல்லாம் பெற்ற உள்ளங்கள் கற்பனை செய்வதுண்டு. ஆனால் அந்தக் கற்பனைக்குப் பின்னால் சூழ் நிலை எப்படி இருக்கிறது—குழந்தைகளை முறையாக வளர்க்க நாம் எத்தகைய உழைப்பை முதலீடு ஆக்கினோம் எனச் சிந்திக்கின்ற நேரம் அவர்களுக்கு இருக்காது.

குழந்தைகள் வளர, வளரப் பிரச்சினைகளும் அதிகமாக உருவாகும். ஒரு குழந்தையைப் பற்றித்தான் இப்பொழுது பேசிக் கொண்டிருக்கின்றேன். பல குழந்தைகளைப்பற்றியல்ல. ஒரு குழந்தையைப் பெற்று, படிக்க வைத்து, பட்டம் பெறச் செய்து, பதவியிலே அமர்த்தி, வீட்டுப் பாதுகாப்புக்கு வருமானத்தைப் பெறுமளவுக்கு தங்கள் குழந்தையைத் தகுதி பெறச் செய்ய வேண்டும் எனக் கற்பனை செய்கிறார்கள்.

ஆனால் படிக்க வைக்க முடியாமல், வேலை பெறும் அளவு திறமையைப் பெறாதவனாக அக்குழந்தை ஆக்கப் படுகிறது. வறுமையின் பெயரால், தாய் தந்தையர்க்கு தக்க வருமானம் இல்லை என்பதால் அந்த நிலை உருவாகி விடுகிறது. ஆகவே அவர்களது பிள்ளை தக்க திறமையைப் பெற முடியவில்லை என்ற நிலையில் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கஷ்டப்பட்டும், விரும்பியும் கூட முடியாமல் போய் விடுகிறது. கல்வி பெறச் செய்ய வாய்ப்பு இல்லாத காரணத்தால் எங்கோ கூலி வேலை செய்து, வண்டி இழுத்து, சில சமயம் அங்கே கிடைக்கிற பணம் கூடக் கிடைக்காமல் போய், அப்படிக் கிடைக்கும் பணத்தையும் ஏதாவது தவறான வழியில்—எதைச் சொல்லுகிறேன் என்று உங்களுக்குப் புரியும், —அங்கே செலவு செய்து [illegible] வீட்டுக்குத் திரும்புமேயானால், அத்தகைய பெற்றோர்களின் உள்ளம் எத்தகைய வேதனையை அடையும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஒரே குழந்தை, வேறு குழந்தைகள் இல்லை என்ற நிலையில், இல்லாமை காரணமாக, வறுமை காரணமாக அதைப் படிக்க வைக்க முடியாமல்—சரியான கல்வி பெற இயலாமல் உழைக்கின்ற நேரத்தில் உழைப்பை அதிகமாக்கிக் கொண்டு, மற்றவற்றின் மூலம் மனத்திற்கு உற்சாகத்தையும் வலிவையும் ஏற்றிக் கொள்ளலாம் என்ற தப்பான கருத்துக்குச் சொந்தக்காரனாகி விடுவானானால் எவ்வளவு பெரிய வேதனை அந்தப் பெற்றோர்களுக்கு இருக்கும் என்பதையும், அவர்களது கற்பனையெல்லாம் எப்படி தூள் தூளாகப் போயிருக்கும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதுவுமல்லாமல் ஆண்டுக்கு ஒரு குழந்தை ஆபத்தில்லாமல் . பிறந்திருக்கிறது என்று சொல்லி, ஐந்தாறு குழந்தைகளுக்குச் சொந்தக்காரராகி விட்டால் இப்படிப் பட்டவர்களுடைய வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## உடல் வலிவுக்குத் தாய்ப்பால்

வேடிக்கையாகச் சொல்வதுண்டு. இடுப்பிலே ஒரு குழந்தை. கையிலே ஒரு குழந்தை. தோளிலே ஒரு குழந்தை. தொட்டிலிலே ஒரு குழந்தை. எந்தக் குழந்தையைத் தாலாட்டுவது, சீராட்டுவது, எப்படிப் பாதுகாப்பது என்ற நிலையறியாமல் தவிக்கின்ற ஒரு தாயை நீங்கள் கற்பனை செய்து பாருங்கள். தந்தைக்கு இல்லையா அந்தப் பொறுப்பு என்று கேட்கத் தோன்றும். இருக்கிறது. தந்தை பகலிலே வெளியே வேலை தேடிச் செல்கிறான். வேலை செய்து, கடமையை முடித்து அந்த வருமானத்தைப் பெற அங்கே செல்கின்றான். அவன் திரும்புகிற வரையில், பன்னிரண்டு அல்லது பத்து மணிநேரம் அந்தத் தாய் அந்தக் குழந்தைகளுடன் படும் கஷ்டத்தை எண்ணிப் பாருங்கள்.

அதிலும் ஒரு குழந்தை தாய்ப்பாலை ஒரு நாலைந்து ஆண்டு காலம் தனக்கு மட்டும் சொந்தமாக்கிக் கொண்டு அருந்தினால், அந்தக் குழந்தையினுடைய உடல் வலிவு, இளமைத் தோற்றம், முறுக்கான வாலிப இளமை பல ஆண்டுகளுக்கு அப்படியே இருக்கிறது என்பதை, நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

விழா மேடையில் முதலமைச்சர் அவர்களும் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ஆர். சௌந்திரராசன் அவர்களும்.



இதைச் சொல்லும் பொழுது இன்னொன்றையும் நான் குறிப்பிடுவேன். குழந்தைக்கு அளவுக்கு மீறி தாய்ப்பால் கொடுத்தாலும் ஆகாது. கிடைக்க வேண்டிய அளவு தாய்ப்பால் கிடைக்கா விட்டாலும் அந்தக் குழந்தைக்குக் கெடுதல். அதையும் நாம் சிந்திக்க வேண்டும். இப்படி ஒவ்வொன்றிலேயும் குடும்பநலம் தொக்கி நிற்கிறது என்னைப் பொறுத்த வரையில் எனக்குப் பிறகு என் தாய்க்குக் குழந்தைகளே பிறக்கவில்லை. எனக்கு அந்தப் பிரச்சினையே இல்லை. எனக்குப் போட்டியே இல்லை. நான்தான் கடைசிக் குழந்தை என் தாய்க்கு. ஆகவே அந்தப் பிரச்சினையும் இல்லை. தாய்ப்பால் கிடைக்கவில்லையே என்ற நிலையே ஏற்படவில்லை. என் அனுபவத்தைச் சொல்வது பெருமைக்காக அல்ல. அனுபவத்தைச் சொல்வது கடமை என்று கருதிச் சொல்லுகின்றேன்.

நாடகக் கம்பெனிகளில் நாங்கள் நடித்துக் கொண்டிருந்த பொழுது எத்தனையோ குழந்தைகளைப் பார்த்திருக்கின்றோம். சிலர் ஒல்லியாக இருப்பார்கள். ஆனால் வலிமை மிக்கவர்களாக இருப்பார்கள். சிலர் பருமனாக இருப்பார்கள். 'ஒதியம் பெருத்தால் உத்திரத்துக்கு ஆகாது' என்பது போல் இருப்பார்கள்.

செல்லமாகவே குழந்தைகளை வளர்த்து விடக் கூடாது. சதைப் பிண்டமாகவும் குழந்தையை வளர்த்து விடக் கூடாது. அதே சமயத்தில் நோயாளியாகவும் குழந்தையை வளர்த்து விடக் கூடாது. மலேரியா போன்ற நோய்கள்தான் உடல் நலத்தைக் கெடுக்கிறது என்று கருதாதீர்கள். சத்துள்ள ஆகாரமில்லாமல் ஒரு குழந்தை வளர்க்கப்பட்டால் அதுவும் நோய்தான்.

## மருத்துவமனை நடத்தி கண்டறிந்த உண்மை!

முன்பு சட்டமன்றத் தலைவராக இருந்த திரு. கிருஷ்ணராவ் அவர்களை வைத்து என் சொந்தப் பணத்தைப் போட்டு மக்களுக்காக இலவச மருத்துவமனை ஒன்றைத் திறந்தேன். ஸ்டேன்லி மருத்துவமனை மருத்துவர்கள் பலர் இலவசமாக அங்கே வந்து பணியாற்றினார்கள்.

ஒரு மாதம் கழிந்த பிறகு கணக்குப் போட்டு, வந்தவர்களுக்கு என்ன நோய், என்னென்ன மருந்துகள் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தோம். வந்த பெரும்பாலோருக்கு ஊட்டச்சத்து இல்லை, எனவே அதற்கான மருந்துகளெல்லாம் குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் கொடுத்துக் காப்பாற்ற வேண்டி வந்தது என அறிந்தோம். ஆகவே ஊட்டச்சத்து இல்லாத காரணத்தாலேயே குழந்தைகள் நோய்வாய்ப் படுகிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

நாம் உண்ணுகின்ற உணவில் எந்த அளவிற்கு ஊட்டச்சத்து இருக்கிறது. நான் உள்பட, நாம் அனைவரும் உண்ணும் உணவில் தேவையான அளவு ஊட்டச்சத்து இருக்கிறதா என நினைத்துப் பார்க்கிறோமா? சுவையாய் இருப்பவற்றை நாம் சாப்பிடுகிறோம். என்ன சாப்பிடுகிறோம் என்பது பற்றி எண்ணுவதில்லை. சுவையாக, ருசியாக நன்றாக இருந்தால் சாப்பிடுகிறோம். அது அசைவ உணவாக இருந்தாலும் சரி, சைவ உணவாக இருந்தாலும் சரி, நமக்கு எதுபிடிக்கிறதோ அதைச் சாப்பிடுகிறோம். அந்த உணவிலிருந்து நம் உடலில் எவ்வளவு ஊட்டச் சத்து சேருகிறது. நமக்கு என்னென்ன ஊட்டச்சத்து, எவ்வளவு தேவைப் படுகிறது என்பதைப் பற்றிக் கணக்குப் போடுவதில்லை.



தமிழ்நாட்டில் நடந்துவரும் குடும்ப நல விளம்பரப்பணிகளைப் பாராட்டி, மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள், துணை இயக்குநர் திரு வி. நாமதேவன் அவர்களிடம் கேடயம் ஒன்றைப் பரிசாக வழங்குகிறார்.

அப்படிக் கணக்குப் போட்டுப் பார்த்து, தேவையான அந்த அளவு ஊட்டச்சத்துணவு சாப்பிடஎல்லோருக்கும் வசதியிருக்கிறதா என்றால், 80 அல்லது 90 சதவிகிதத்தினருக்கு அந்த வசதியும் இல்லை.

ஏழ்மைக் கோட்டுக்கும் கீழான நிலையில் 60க்கும் மேற்பட்ட சதவிகித மக்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் இருக்கிறார்கள் என்கிறார்கள். 60 சதவிகிதம் என்றால் பெரும்பான்மையான மக்கள். அந்தப் பெரும்பான்மையான மக்களுக்கு ஊட்டச் சத்து கிடைக்கவில்லை. காரணம் அதற்குத் தகுந்த வருமானம் இல்லை. வருமானம் ஏன் கிடைக்கவில்லை என்றால் வேலை இல்லை. வேலை ஏன் இல்லை என்றால் தொழில் இல்லை. தொழில் இல்லையா என்றால், எவ்வளவு தொழில் வாய்ப்புக்களை நம்மால் உருவாக்க முடிகிறதோ அதைவிடக் குழந்தைகள் உற்பத்தி—மக்கள் தொகைப் பெருக்கம் அதிகமாகி விடுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகப் பரவுகிறது. வருமானம் ரூ. 20/- செலவு ரூ. 35/- என்றால் 15 ரூபாய் கடனிலே இருக்கும்.

ஆண்டுதோறும் 1 கோடியே 30 லட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. ஆனால் நாட்டிற்குரிய தொழிற்சாலைகள் தொழில்கள், தொழில் நுட்ப நிலையங்கள், மருத்துவமனைகள், பள்ளிகள், கல்லூரிகள், அரசு செய்ய வேண்டிய கடமைகள் இவற்றையெல்லாம் எவ்வளவுதான் திட்டம் போட்டுச் செய்தாலும் மக்கள் தொகைப் பெருக்கத்தின் அளவுக்கு சமம் செய்ய முடியாது போகிறது. எனவே ஏழ்மை தொடருகிறது. வறுமை தொடருகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் தொடருகிறது. அது மட்டுமல்ல, பெற்றோர்களை நோய் வாட்டுகிறது. குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவு இல்லாததால், எத்தகைய வலிவு தேவையோ அது இல்லாமல் அந்தக் குழந்தைகள் கஷ்டப் படுகின்றன.

வெளி நாடுகளில் பயணம் செய்யும் வாய்ப்புக் கிடைத்த போது நான் பல குழந்தைகளைப் பார்த்திருக்கின்றேன். இங்கே நாம் குழந்தைகளை வளர்க்கும் விதமே விசித்திரமாக இருக்கும். ஒரு பணக்காரன் வீட்டில் அல்லது மக்களிடம் செல்வாக்கு உள்ளவர் வீட்டில் குழந்தைகள் இருந்தால் போதும். அவரைத் திருப்திப்படுத்துவதற்காக அவர்களது வீட்டிற்குச்



159881

செல்பவர்களெல்லாம், குழந்தையைத் தூக்கித் தூக்கி வைத்து, அந்தக் குழந்தை தானாக இயங்கக் கூட முடியாது செய்து விடுவார்கள். காலப்போக்கில் அக் குழந்தையின் கால் கைகளெல்லாம் வளைந்த நிலையடைந்து வலிவு ஏற்பட முடியாத நிலைமையில் அந்தக் குழந்தைகள் 20 அல்லது 22 வயதில் 70 அல்லது 80 அடைந்தவர் போல, எழுந்து வாப்பா என்றுசொன்னால் போ..லா..ம் அப்பா! என்று சோர்வே உருவெடுத்துச் சொல்லுகின்ற நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். அதற்காக நான் வேதனைப்படுகின்றேன்.

## இருந்தும் கெடுப்பான்!
## இறந்தும் கெடுப்பான்!

நமது இளைஞர்களை உடல் கட்டோடு பார்க்கும்போது மகிழ்ச்சியடைகிறேன். மற்றொரு பக்கம் நாகரிகம் என்ற பெயரால் நமது இளைஞர்கள் அணிந்துள்ள உடையையும் மீறி எலும்பு வெளித்தெரிவதைப் பார்க்கும்போது உண்மையிலேயே நான் வருத்தப்படுகிறேன். உருண்டு, திரண்ட சதைக்கட்டு தேவை. அதற்கு உடற்பயிற்சி செய்ய வேண்டும். உடலை நன்றாகப் பாதுகாக்க முடியும். ஆனால் நாகரிகம் என்ற பெயரால் உடலைப் பாதுகாக்காது விட்டுவிடுகிறார்கள். அது என்ன நாகரிகமோ எனக்குத் தெரியவில்லை. வசதியுள்ளவர்களே இப்படி என்றால் வறுமை வரம்புக்கும் கீழே உள்ள நிலையில் வாழ்க்கை நடத்தும் 60 சதவிகித மக்களைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இருந்தும் கெடுப்பான், செத்தும் கெடுப்பான் என்று சொல்லுவார்கள். அதே போல் சிலர் சில காரியங்களைச் செய்து விட்டு மற்றவர்கள் மேல் சுமத்தி விட்டுச் செல்வதுண்டு. அது போல் தாய் தந்தையர்கள் இருந்து விடக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

இங்கே குடும்ப நல அறுவைச் சிகிச்சை, பாதுகாப்புக் கருவிகள் எல்லாம் இருக்கின்றன என்று நான் குறிப்பிட்டேன். அவைகளை வைத்துத்தான் குழந்தைகள் உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற நிலையில் நாம் இருப்போமேயானால், அது கட்டுப்பாடல்ல. இயற்கை, உங்களுடைய அறிவுச்சக்தி, உங்களுடைய ஆற்றல் இவை உங்களைக் கட்டுப்படுத்தவில்லை. சட்டம் அல்லது உங்களது தோல்வி, உங்களிடையே கட்டுப்பாடின்மை இப்படிப்பட்டவை, உங்களைக் கட்டுப்படுத்துகின்றன. அறுவைச் சிகிச்சை போன்றவை உங்களைக் கட்டுப்படுத்துவதில்லை. தயவுசெய்து இதை யாரும் மறந்து விடக் கூடாது.

நாம் நினைத்தால் எதையும் நிறைவேற்ற முடியும். இது அகந்தை அல்ல. மனிதன் நினைப்பதற்கும் எல்லை இருக்கிறதல்லவா? அதை வைத்துக் கொண்டு சொல்லுகின்றேன். இந்த நாட்டை நான் ஒருவனே ஆள வேண்டும், எல்லோரும் என் பக்கம் வந்து விட வேண்டும் என்றெல்லாம் நான் சொல்லவில்லை. நியாயமாக நடைமுறையில் எப்படி நடக்குமோ, அது போல் முயற்சி செய்தால் நிச்சயமாகச் சொல்லுகிறேன், ஒரு மனிதன் அதைச் செய்துகாட்ட முடியும்.

என் இருபது வயதில் தேகப்பயிற்சி, சிலம்பு விளையாட்டு முதலியவற்றைக் கற்றுக் கொண்டிருந்தாலும், குத்துச்சண்டை, குஸ்தி போன்றவற்றில் பழக்கப்பட்டிருந்தாலும், நான் உடற்பயிற்சி அதிகமாகச் செய்யவில்லை. ஆனால் 30 அல்லது 35 வயதுக்குமேல் நான் உடற்பயிற்சி துவங்கிய பிறகு, இருபது வயதிலே இருந்த உடற்கட்டை விட, 35 வயதிலே உடற்கட்டு உருவாகி இருந்தது என்பதை மட்டும் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது கட்டுப்பாடு. இதைச் செய்ய வேண்டுமென்று நினைத்தால் நம்மால் செய்ய முடிகிறது. நம்மால் முடியாது என்று நாமே முடிவு எடுத்து விட்டால் முடியாது, இதை உங்களுக்கு நான் சொல்லியாக வேண்டும்.

நீங்கள், ''எனக்கு இனி ஐந்தாண்டுகளுக்குப் பிறகு தான் அடுத்த குழந்தை பிறக்கும்'', என்ற நினைப்புக்குச் சொந்தக்காரராகி நடைமுறைப் படுத்தக்கூடிய அளவுக்கு உங்களை நீங்களே கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில், இங்கே அந்த நிலைமைகளை விளக்க முடியவில்லை. அந்தக் கட்டுப்பாட்டை நாம் இயற்கையாகவே கைக்கொள்வோமேயானால் ஒரு ஆண், பெண்ணுக்கு இடையே உள்ள உறவும் கெட்டுப் போகாது. குழந்தையும் பிறக்காது. இது சாதாரணக் காரியம். இதை நம்மால் செய்ய முடியும். இதைச் செய்தாக வேண்டும். விஞ்ஞான ரீதியாக, அறிவியல் முறையில் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் நாம் தெரிந்து கொள்ள முயலுவதில்லை.

## மாறிவரும் காலமும் கருத்தும்!

இங்கே நான் வேடிக்கையாக ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். காலம் எப்படி மாறுகிறது என்பதை வெவ்வேறு இடங்களில் சொல்லியிருக்கின்றேன். இங்கே இப்போது எங்கே பார்த்தாலும் 'நிரோத்' பற்றி விளம்பரம் செய்கிறார்கள். 'நிரோத் உங்கள் குடும்பநலத்துக்குப் பாதுகாப்புக் தருகிறது' என்று சொல்லுகிறார்கள்.

30 அல்லது 35 ஆண்டுகளுக்கு முன் யாராவது 'நிரோத்' வைத்திருந்தால், அவன் கெட்ட நோக்கம் உள்ளவன் என்ற பட்டம் கிடைக்கும். French Leather என்று அப்போது சொல்லுவார்கள். இந்த நிரோத்தை யாராவது அப்போது வைத்துக் கொண்டிருந்தால் அவன் நல்ல நடத்தை உள்ளவனல்ல. தீய பழக்கங்களுக்குச் சொந்தக்காரன் என்ற பட்டங்கள்தான் அன்று கிடைத்தன.

இன்று அதை வைத்துக் கொண்டால் குடும்பத் தலைவன் ஆகும் அளவுக்கு அக்கறை உள்ளவன். அவனுக்குப் பொறுப்பு இருக்கிறது. ஆகவே வைத்துக் கொண்டிருக்கின்றான் என்ற அளவுக்கு நாடு நினைக்கிறது. அந்த வகையில் காலமும் கருத்தும் மாறியிருக்கிறது. எந்தக் காரியம் தீமைபயக்கத்தக்கது—அதை வைத்திருப்பவன் கெட்ட நடவடிக்கைகளுக்குச் சொந்தக்காரன் என்ற நிலையை, காலமாற்றம் மாற்றியிருக்கிறது. அதே மனிதன் குடும்பப் பொறுப்பு உள்ளவனாகக் கருதப்படுகின்றான். இன்று இந்த நிலை. இன்றைய நம் முடிவுகளும் பிறவும் இன்னும் 25 ஆண்டுகள் கழித்து எதிர்காலச் சமுதாயத்தின் எத்தகைய முடிவுக்கு உள்ளாகப் போகின்றன என்பதை நம்மால் சொல்ல முடியாது. ஆனால் இருக்கின்ற சூழ்நிலையில் மக்கள் நல்வாழ்வு வேண்டுமென்று விரும்பும் பொழுது, அவ்வப்போது கிடைக்கின்ற கருவிகள், அறிவியல் துறை அறிவுரைகள், கருத்துக்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தும்போது, நாம் கடமையைச் செய்தவர்களாகின்றோம்.

அந்தக் கடமையை மக்களுக்கு நினைவூட்ட—சொல்லித்தர அல்ல, நினைவூட்டுவதற்கு இந்த விழா, குடும்ப நல இருவார விழாவாகத் தொடங்கப்படுகிறது. இதை நான் தொடங்கி வைக்க வேண்டுமென்று பணித்தார்கள். விழா எடுத்தவர்களைப் பாராட்டத்தான் வேண்டும். நான் நன்றி கூறவும் கடமைப் பட்டிருக்கின்றேன்.

## இளமையில் அடைந்த வேதனைகள்!

என்னுடைய வாழ்க்கையின் இளமையில் அடைந்த வேதனை அனுபவத்தை இங்கே சொன்னால் அது உள்ளத்தில் தைக்கும் என்று கருதுகிறேன். நான்கைந்து நாட்களுக்கு முன்புதான் குறிப்பிட்டேன். மீண்டும் சொல்கிறேன்.

'' கொடிது கொடிது இளமையில் வறுமை'' என்று பெரியவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதை என் இளமையிலே அனுபவித்தவன் நான். என் மூன்று நான்கு வயது காலத்தில் நானும் என் தாயும் மூன்று நாட்கள் பட்டினி கிடந்ததுண்டு. குழந்தைகளை அழைத்துக் கொண்டு போய் பிச்சைகேட்கத் தயாராய் இல்லாத காரணத்தால், நாங்கள் அப்படியே மடிந்து விடுவது என்ற முடிவில் இருந்தோம். பசிக்கிறது என்பேன் நான். என் தாய் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுப்பார்.

பக்கத்து வீடு—எங்கள் வீட்டிற்கும் அந்த வீட்டிற்கும் ஒரே குறுக்குச் சுவர். கூரை கிடையாது. பக்கத்து வீட்டு அந்த அம்மையார், முறத்தில் அரிசியைக் கொடுத்து கஞ்சி காய்ச்சிக் குடிக்கச் சொன்னார்கள். அது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அந்த அம்மையார் யார் என்பது எனக்குத் தெரியாது. அப்படிப்பட்டவர்கள் சமுதாயத்தில் இருக்கின்றார்கள் ஆங்காங்கே!

கொஞ்சம் நினைத்துப் பார்க்கவேண்டும். அப்போது என் தாயினுடைய உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும். என் தந்தையில்லை. வசதியாக வாழ்ந்த குடும்பம். லட்சக்கணக்கான சொத்துக்களை உடைய குடும்பத்தில் அவர்களுக்கு உறவும் இருந்தது. பிறப்பும் அப்படி. எல்லாவற்றையும் இழந்து, ஏழையாகி குழந்தைகளை வைத்துக் கொண்டு, மூன்று நாட்கள் பட்டினி கிடந்து செத்து விடக் கூடத் தாயாராக இருந்தார்கள்.

என் தாய்க்கு ஐந்தாறு குழந்தைகளில்லை. இரண்டே குழந்தைகள்தான். வீட்டு வேலை செய்துதான் வயிறு வளர்க்க முடியும். இருந்தும் அந்த வேலை கூடக் கிடைக்காத நிலையில் என்னுடைய தாய் எவ்வளவோ கஷ்டப்பட்டார்கள். அந்தத் தாய்க்கு இன்னுமொரு நான்கு குழந்தைகள் அதிகமாக இருந்திருந்தால், நிலைமை எப்படிப்பட்டதாக இருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.

அப்படிப்பட்ட கொடுமைகள், நிலைமைகள் தமிழகத்தில் எந்தக் குடும்பத்திற்கும்—மனித உணர்வோடு பேசினால்—உலகிலுள்ள எந்தக் குடும்பத்திற்கும் வராமல் இருக்க வேண்டுமென்பதுதான் அறிஞர் அண்ணாவின் நோக்கான 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதற்கு உகந்ததாக இருக்க முடியும். அந்தத் தத்துவத்தை அறிஞர் அண்ணா அவர்கள் எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை எடுத்துச் சொல்ல எனக்கும் வாய்ப்புக் கிடைத்தது என்றால், ஏதோ அண்ணா அவர்கள் தந்த பிச்சை என்றுதான் கருதுகின்றேன்.

## உங்களால் முடியும்

எனவே உங்கள் உள்ளத்தில், நீங்களே ஒரு உறுதியை—நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இப்படிக் கட்டுப்பாடுகளால் கட்டுப்படுத்தி, கருவிகளாலும், அறுவைச் சிகிச்சைகளாலும் குழந்தைகள் பிறக்கும் வாய்ப்பைத் தவிர்க்கும் சூழ்நிலைகள் இல்லாமல், நீங்களாகவே மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு, விஞ்ஞான முறையைப் புரிந்து கொண்டு நீங்கள் உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்களானால், என்றும் நீங்கள் இளமையாக இருக்க முடியும். விரும்பும்போது குழந்தையைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துக் கொடுக்கும் அளவுக்கு வசதியும் வாய்ப்பும் இருக்க வேண்டும். நாட்டில் பொருள்களின் உற்பத்தி பெருக வேண்டுமே தவிர, குழந்தைகளின் உற்பத்தி ஓரளவுக்கு எண்ணிக்கைக் கட்டுப்பாடோடு இருக்க வேண்டும்.

நமக்கு ஆசை இருக்கும். மூன்றும் ஆண் குழந்தைகள். ஒரு பெண் பிறக்கக் கூடாதா? அல்லது இரண்டும் பெண், ஒரு ஆண் குழந்தை பிறக்கக்கூடாதா? இப்படி ஆசை இருக்கும். ஆசையை நீங்கள் அழித்துக் கொள்ளுங்கள் என்று நான் சொல்லவில்லை. இன்னும் கொஞ்சம் நன்றாகச் சிந்தித்து, மருத்துவர்களிடமிருந்து அதைத் தெரிந்து கொள்ள முயன்றால், உங்களால் முடியும். இளைஞர்களால் முடியும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இளைஞர்களுக்கு நான் ஒன்று சொல்லுவேன். இப்போது திருமண வயதை 21, 18 என ஆக்கியிருக்கிறார்கள். அது போதுமா, போதாதா என்பதல்ல. 21 வயது, 18 வயது என்பது இப்போது பலருக்குக் கோபத்தைக் கூட உண்டாக்கும் என்று கருதுகிறேன். நாட்டுக்கு நன்மை எனும்போது கோபப்படுபவர்களைப் பார்த்து ஆத்திரப் படாமல் பொறுமையாக இருந்து, ஒன்றிரண்டு ஆண்டுகள் கழித்துப் பார்த்தால், அவர்களே நம்மைப் பாராட்டுவர்கள்.

இதைத்தான் நமது அண்ணா அவர்கள் கைக் கொண்டார்கள். அதைத்தான் நானும் கைக் கொள்கிறேன்.

என்னோடு சில நண்பர்கள் இருக்கிறார்கள். இங்கே வந்திருக்கிறார்கள். அவர்கள் மேடையிலே மிக அழகாகப் பேசுகிறார்கள் குடும்ப நலத் திட்டத்தைப்பற்றி. அவர்கள் வீட்டிலே எத்தனை குழந்தைகள் என்றால் பேசமாட்டார்கள். அப்படிப்பட்ட நண்பர்கள் இருக்கின்றார்கள். அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத்திலும் இருக்கின்றார்கள். தி. மு. கழகத்திலிருந்து வந்தவர்களும் இருக்கிறார்கள். திராவிடர் கழகத்திலிருந்து வந்தவர்களும் இருக்கிறார்கள். நான் சொன்னதற்குக் காரணம், இந்த நிலைமை ஏற்படும் என்று அவர்கள் தெரிந்து கொள்ளாததால் அல்ல. இயற்கையாக இந்த சூழ் நிலையில் இதைப் பற்றிச் சிந்திக்க அவர்களுக்கு நேரம் இல்லை.

அப்படிச் சிந்திக்கக் கூடியநேரத்தை உருவாக்குவதுதான், ஏற்படுத்தித் தருவதுதான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளே தவிர, புதியதைச் சொல்லிக் கொடுப்பதற்கு, உலகத்திற்கு, உங்களுக்குத் தெரியாததைச் சொல்லிக் கொடுப்பதற்கு, அறிவுரை கூறுவதற்கு இந்த நிகழ்ச்சி நடை பெறவில்லை.

சுடர் விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும். என்பதுபோல், உங்கள் உள்ளத்தில் இருக்கின்ற அந்த அறிவுச் சுடரைத் தூண்டி விடுவதற்காக நாங்கள் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துகிறோம். உங்கள் ஆற்றலை, அறிவை, திறமையை நல்ல வழியிலே பயன்படுத்தி, சிறப்பான குழந்தைகளைச் சீராகப் பெற்று, அறிவுள்ள குழந்தைகளாக—இந்த நாட்டின் எதிர்காலத்தைக் காப்பாற்றக் கூடிய அறிஞர் பெருமக்களாக அவர்களை வளர்க்க வேண்டும். அவர்களை வாழச் செய்ய வேண்டும். அவர்கள் மூலமாக இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்று உங்களையெல்லாம் பணிவோடு கேட்டுக்கொண்டு, குடும்பநல இருவார விழாவைத் துவக்கி வைத்து, உங்கள் ஆசியைப் பெற்று விடை பெறுகிறேன். அண்ணா நாமம் வாழ்க!

# குழந்தை நலமே குடும்ப நலம்!

மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஆர். சௌந்தரராசன்

குடும்ப நலத் திட்டம்
தாய் நலம் பேணும் திட்டம்!
சேய் நலம் காக்கும் திட்டம்!
குடும்பத்தின் அடிப்படைத்
தேவைகளைத் தங்கு தடையின்றி
நிறைவு செய்து கொள்ள உதவுந் திட்டம்!

நாட்டின் எதிர்காலம் இன்றைய குழந்தைகள் தானே! அந்தக் குழந்தைகள் செவ்வனே பாதுகாக்கப்பட வேண்டும்! ஊட்டம் மிக்க சத்துணவு கொடுத்து வளர்க்கப்படவேண்டும். இந்தியாவின் மக்கள் தொகை அறுபத்து மூன்று கோடியே நாற்பத்தியேழு லட்சம் என்றும், அதில் 40 சதவிகித அளவினர் பதினைந்து வயதுக்குட்பட்டவர்கள் என்றும், உலக அளவிலானபுள்ளி விவரம் ஒன்று கூறுகிறது. இந்தியாவில் குழந்தைகளின் சாவு எண்ணிக்கை ஆயிரத்துக்கு 129 ஆக உள்ளது. உலகில் மக்கள் தொகையால் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ள நம் நாட்டில் இந்த நிலை. மக்கள் தொகையால் முதலிடம் பெற்றுள்ள சீனாவில் குழந்தைகளின் சாவு எண்ணிக்கை ஆயிரத்துக்கு 65 தான்; குழந்தைகள் நலம் காப்பதில் நாம் தனி அக்கறை காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆறு வயதுக்குக் குறைவான குழந்தைகள் ஏறத்தாழ 17 அல்லது 18 விழுக்காடு இருப்பதாக அறிகிறோம். இவர்களிடையே நோய்கள் பரவுவதும், தொத்திக் கொள்வதும் மிக எளிதில் நடக்கின்ற காரியமாக உள்ளது. சிறப்பாகச் சத்துணவுக் குறைபாடும், நோய்களால் பாதிக்கப்படும் தன்மையும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே வெகுவாக இருக்கிறது எனச் சொல்லப்படுகிறது. வயிற்றுப்போக்கும் இன்னும் பல நோய்களும், உண்ண வேண்டிய அளவு உணவு உட்கொள்ளாததால் (Mal Nutrition) ஏற்படுகின்றன என்றும், இதே நிலை நீடித்தால் எய்த வேண்டிய அளவு அறிவாற்றலை (Intellectual Potential) அக்குழந்தைகள் பெறமுடியாது போகும் என்றும் மருத்துவ உலகம் கூறுகிறது.

நமது நாட்டில் 80 சதவிகிதத்திற்கும் அதிகமான மக்கள் கிராமங்களில் வாழ்கிறார்கள். அவர்களுடைய வருமானம் மிக மிகக் குறைவு. பாதிக்கும் மேற்பட்டவர்கள் வறுமை வரம்புக்கும் கீழான நிலையில் (below poverty line) வாழ்கிறார்கள். அவர்கள் தேவையான அளவு உணவு கூட உட்கொள்வதில்லை. சிறப்பாகக் கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும் இந்நிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர். கருவிலே வளரும் குழந்தையும், பால் குடிக்கும் பருவத்துக் குழந்தையும் தாயிடமிருந்து கிட்டும் சத்துணவாலேதான் வளர வேண்டிய அவசியத்தில் உள்ளன. ஆனால் அந்தக் குழந்தைகள் அல்லது கருவிலே உருப்பெறும் சிசுக்கள் பெற வேண்டிய சத்துணவைத் தாயிடமிருந்து பெற இயலாது போய்க் குறைவான வளர்ச்சிக்கு உள்ளாகின்றன. தாய்மார்கள் தக்க இடைவெளியின்றி தொடர்ந்த பிள்ளை பேற்றிற்கு உள்ளாவதால் உடல் வளம் இழக்கின்றனர். 'கரு' வும் வளம் குன்றியதாகி விடுகிறது. பிறக்கும்போதே குழந்தை நலிந்தே பிறக்கின்றது. அதன் நல்வாழ்வு போராட்டமாகவே அமைந்து விடுகிறது. மேலும் பள்ளி செல்லும் பருவம் அடைவதற்கு முன்பே பல லட்சக் கணக்கான குழந்தைகள் இயற்கையெய்தும் கொடுமைக்கு ஆளாகி விடுகின்றன. சத்துணவு அளிப்பதும், தேவையான அளவு உரிய உணவை அளிப்பதும் குழந்தைகளின் சரியான வளர்ச்சியில் அக்கறையுடையவர்கள் அனைவரின் கடமையாகும்.



மற்ற மற்ற அவயவங்களுக்கு வைட்டமின்களும், சத்துணவும் எப்படித் தேவையோ அதே போல் குழந்தைகளின் கண் ஒளியைப் பாதுகாக்க 'வைட்டமின்-ஏ' மிக மிக அவசியமாகிறது. பிறக்கும் போதே குருடர்களாகப் பிறப்பதில்லை. ஆனால் குழந்தைப் பருவத்தில் கிடைக்க வேண்டிய அளவு 'வைட்டமின்-ஏ' சத்துணவு கிடைக்காத காரணத்தால் பல லட்சக் கணக்கான குழந்தைகளின் கண்பார்வை பாதிக்கப்படுகிறது. துவக்கத்தில் கண் விழியின் வெண்பகுதி உயிரிழந்து, மங்கி விடுகிறது. அல்லது சுருங்கி விடுகிறது. வெள்ளைப் புள்ளிகள் விழுகின்றன. சிறிது காலத்தில் கரு விழிப் பகுதியும் பாதிக்கப்பட்டு விடுகிறது. இந்தச் சமுதாயத்துக்கு ஒளியூட்ட வேண்டிய குழந்தைகள், ஒளியிழந்து விடுகின்றன. காரணம் கருவுற்ற காலம் முதலும், பாலூட்டும் காலத்திலும் 'வைட்டமின்-ஏ' நிரம்பிய பால், முட்டை, பசுங்கீரைகள், காய்கறிகள் முதலியவற்றைத் தாய்மார்கள் உண்ணாமல் விடுவதேயாகும். 'இதையெல்லாம் தவிர்க்கத்தான் தாயின் நலத்தையும் சேயின் நலத்தையும் காக்கத்தான், குடும்ப நலத் திட்டம் உதவுகிறது. மாலைக்கண் நோய் வராமல் குழந்தைகளைக் காக்க 'வைட்டமின்-ஏ' மருந்தும், கருவுற்ற தாய்மார்களுக்கு இரத்த சோகை நோய், இசிவு நோய் போன்றவை வராமல் தடுப்பதற்கு உரிய மருந்துகளும் குடும்பநலத் திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படுகின்றன.

அதுமட்டுமல்ல. குழந்தைகளுக்கு வரும் கக்குவான் இருமல், தொண்டை அடைப்பான், இசிவு நோய் ஆகியவை வராமல் தடுக்க உரிய தடுப்பு மருந்துகள் குழந்தைகளுக்கு இலவசமாகப் போடப்படுகின்றன. டைபாய்டு காய்ச்சல் வராமல் தடுக்கவும் தடுப்பு மருந்து உண்டு.

'குறைவான குழந்தைகளுடன்
நிறைவான வாழ்வு வாழுங்கள்'

எனக் கூறும் குடும்ப நலத் திட்டம், குழந்தைகளைக் குறைவாகப் பெற்றுக் கொள்ளுங்கள் எனச் சொல்வதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. பிறந்து விட்ட குழந்தைகளை நோய்களிலிருந்து பாதுகாத்து, நிச்சயமாக அந்தக் குழந்தைகள் உயிருடன் வாழும் என்ற நம்பிக்கையைப் பெற்றோர்களுக்கு அளித்து வருகிறது!

குழந்தைகளுக்குத் தேவையான சத்துணவுகள் என்னென்ன? எந்த அளவு கொடுக்க வேண்டும் என்ற விவரங்கள் எல்லாம் கூடத் தெரியாத நிலையில் நம் தாய்மார்கள் உள்ளார்கள். நான்கு மாதக் குழந்தைக்கே பருப்பு, முட்டை, காய்கறிகள், சப்பாத்தி எல்லாம் கொடுக்கலாம் என்றும், குழந்தைக்கு ஆறுமாதமாகி விட்டால் இந்த உணவு கொடுக்கத் துவக்கி விட வேண்டும் எனவும் மருத்துவ வல்லுநர்கள் பரிந்துரைத்துள்ளார்கள். ஒவ்வொரு பருவத்திலும் குழந்தைகளுக்குத் தரவேண்டிய உணவுகள் பற்றியும், அளவு பற்றியும் பரிந்துரை செய்துள்ளார்கள். இன்னின்ன பருவத்தில் குழந்தைகள் இவ்வளவு எடை இருக்க வேண்டும்—இவ்வளவு உயரம் இருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் அந்தக் குழந்தை உரிய வளர்ச்சி பெற்றதாக அர்த்தம் என்ற தகவல்கள் அவர்களாலே தரப்பட்டுள்ளன. அதற்கெல்லாம் ஏற்றவாறு குழந்தைகளை வளர்த்து ஆளாக்க வேண்டுமானால்—குழந்தைகள் நலத்தை அந்த அளவு காக்க வேண்டுமானால் குடும்பநலம் காக்க வேண்டியது மிக மிக அவசியமாகும்.



பாளையங்கோட்டையில் நடைபெற்ற குடும்ப நல இருவார விழாவில், ம
முதன்மைக் கல்வி அலுவலர் திரு. கிருஷ்ணமூர்த்தி தலைமையுரை நிகழ்

எனவே குடும்ப நலத்திட்டம் என்றால் தாய்-சேய் நலத்திட்டம் என்ற உணர்வு, கிராம மக்களிடையே ஏற்படவேண்டிய அளவுக்கு, குடும்பநல இருவார விழாவைப் பயன்படுத்திக் கொண்டு களப்பணியாளர்கள் மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும்.

குழந்தைச் செல்வங்களைத் தக்க முறையில் வைத்துக் கொள்வதற்குக் குடும்பநலம் துணை செய்கிறது என்ற வலுவான நம்பிக்கை மக்களிடையே வளரத் தூண்டுகோலாக, இருவார விழாப் பணிகள் அமைய வேண்டும்! களத்திலே நின்று பணியாற்றும் தாய்மார்கள், பெண்கள், ஆண்கள், அத்தனைபேரும் சுணக்கம் ஏதுமில்லாமல், இந்தக் கருத்துக்களைப் பரப்ப வேண்டும்! 'குழந்தை நலமே குடும்ப நலம் என்ற உணர்வை இருவார விழாவைப் பயன்படுத்தி நாடு முழுவதிலும் ஏற்படுத்தி விட்டால் குடும்ப நலத்திட்டம் வெற்றி பெற்று விடும் என்பதில் ஐயமில்லை.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஒரு தாயுள்ளம் எப்போது மகிழும் என்பதை இப்படிப் பாடியுள்ளார்:

"ஒரு மகன், ஒரு மகள் என்னிரு கண்கள்
உறவன்புக் காதலில் பிறந்தசீர்ப் பண்கள்
அருந்தமிழ் நாட்டுக்கு அளித்த நன்கொடை
அனைத்துல கொன்றாக்கும் தொண்டுக் கின்படை!

வள்ளுவர் இரண்டடி எம்இரு பிள்ளை
வாழ்வார்க்கு இலக்கணம் கற்பிக்கும் கிள்ளை!
அள்ளூறிப் போகின்றேன் மக்களால் யானே
அன்பின் வழியினர் அமிழ்திவர் தேனே!

இத்தகைய மகிழ்ச்சியைத் தாயுள்ளங்கள் பெற வேண்டுமானால் தாய் நலம் காக்க வேண்டும். சேய் நலம் பேண வேண்டும். இத்தனைக்கும் அடிப்படையான குடும்பநலம் ஏற்க வேண்டும்!

(தேசியக் குடும்ப நலத்திட்ட இருவார விழாவையொட்டி சென்னை வானொலி நிலையம் 25—10—1978 ஆம் நாள் மாலை 6-15 மணிக்கு ஒலிபரப்பிய மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஆர். சௌந்தரராசன் அவர்களது செய்தி)

# குடும்பநலம் வெற்றி பெற துணை நிற்பது சட்டமா? மன மாற்றமா?

## சிவகெங்கையில் சூடான பட்டிமன்றம்

இன்று இங்கே குடும்பநலத்திட்ட விழா நடைபெறுகிறது. நாம் இந்திய தேசத்திலே சுதந்திரம் பெற்று 31 ஆண்டுகள் தாண்டி விட்டோம். 31 ஆண்டுகளை தாண்டியும்கூட மக்களுடைய வாழ்க்கை நிலை உயரவில்லை என்று மக்களிடையே ஒரு கருத்து நிலவி வருகிறது. இன்றும் எப்படி அன்னிய ஆட்சியின் கீழ் இருந்த போது மக்களுடைய நிலை சீரழிந்து கேடு கெட்டு இருந்ததோ அந்த நிலையில்தான் இருக்கிறது என்று அடிக்கடி கூற கேட்டு வருகின்றோம்.

ஒரு பேரறிஞர் அவர்கள்—ஜே.எஸ். யாதவ் என்பவர்—இதைப் பற்றி ஒரு பத்திரிகையில் எழுதியிருந்தார்கள். அவர் என்ன எழுதியிருந்தார் என்றால் நாம் 31 ஆண்டுகள் சுதந்திரம் பெற்று தாண்டியிருந்தும் கூட அந்த சுதந்திரத்தின் பயனை மக்கள் அனுபவிக்கும்படியாக நல்ல மாற்றங்கள் செய்யவில்லை. அதற்கு என்ன காரணம் என்று பல காரணங்களை எடுத்துக் கூறியிருந்தாலும் கூட அவர் முக்கியமாக குறிப்பிட்டது ஒன்றே ஒன்றுதான். அதாவது என்ன செய்கிறோம் என்றால் மேல் மட்டத்திலிருந்த மக்கள் மேலும் வளர்ந்து செழித்து வளரும்படியான ஒரு நிலைமைதான் அரசினுடைய பல திட்டங்கள் செயல்பட்டு இருக்கின்றன. கீழ்மட்டத்திலிருக்கும் மக்களுடைய நிலை இன்னும் பின்தங்கி தாழ்ந்து அவர்கள் ஏழைகளாக, பஞ்சைகளாக இருக்கும்படியான நிலைதான் என்று எடுத்துக் கூறி இருக்கிறார். அவர் சொல்கிறபடி நாட்டில் எந்த முன்னேற்றமும் இல்லையா என்று கேட்டால் எனக்கு சரிவர சொல்லவரவில்லை என்று அழுத்தம் திருத்தமாக வரையறுத்து சொல்ல முன்வருகிறேன். எப்படி என்றால் குறிப்பாக உணவுப் பொருட்களை பற்றி எடுத்துக் கொண்டால் நாம் சுதந்திரம் பெற்ற போது நாம் உற்பத்தி செய்தது 50 மில்லியன் டன் உணவு தானியங்கள்தான். ஆனால் இந்த 31 ஆண்டுகளிலே பசுமைப் புரட்சியின் காரணமாக விளைச்சலில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம். இன்று 50 மில்லியன் டன்னிலிருந்து இப்போது 120 மில்லியன் டன் அளவுக்கு நாம் உணவு உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறோம். தன் நிறைவு பெற்று இருக்கிறோம். வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்து கொண்டு இருந்த உணவு தானியங்களை நிறுத்தி விட்டோம். நம் சொந்தக்காலிலே நிற்கும்படியாக ஒரு நல்ல நிலைமை உருவாக்கி இருக்கிறோம்.

இதே போல் கல்வித்துறையை எடுத்துக் கொண்டால் நாம் சுதந்திரம் பெற்ற போது பட்டதாரிகளாக இருந்த மக்கள் 3,50,000 மக்கள் இருந்தனர். இன்றைய நிலை சுமார் 35 லட்சம் இளைஞர்கள் உயர்கல்வி பற்றி அறிந்திருக்கிறார்கள். கல்விசாலைகள் விஸ்தரிக்கப்பட்டு இருக்கின்றன. பெருமளவில் பல திட்டங்கள் செய்திருக்கிறோம். பெரிய கால்வாய் திறந்திருக்கிறோம். பல நல்ல சாலைகள் அமைத்து இருக்கிறோம். பெரிய பெரிய மதகுகளை, அணைகளை கட்டி இருக்கிறோம். இன்னும் உற்பத்தியில் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், நிலக்கரி எரிபொருள் உற்பத்தியில்—நிலையில் உலக அரங்கிலே நாம் 6-வது இடத்தைப் பெற்றிருக்கிறோம்.

இன்னும் மேலாக பார்த்தால், கைத்தறி நூல் உற்பத்தியை எடுத்துப் பார்த்தால் உலகத்திலேயே முதலாவது இடத்தைப் பெற்றிருக்கிறோம். முதல் இடம் கைத்தறி நூல் உற்பத்திக்கு. 6-வது இடம் நிலக்கரி எரிபொருள் உற்பத்திக்கு. 8-வது இடம் ரேயான் உற்பத்திக்கு. பிக் அயர்ன் பேரோ அலாய் காஸ்டிக் சோடா என்ற இவைகளை கொண்ட உற்பத்தியிலே 9-வது இடத்தைப் பெற்றிருக்கிறோம். 10-வது இடம் சிமெண்ட் உற்பத்திக்கு. 13-வது இடமாக நாம் பெற்றிருப்பது சாதாரணமாக செய்யக் கூடிய குருட் ஸ்டீல் என்ற உற்பத்தியில் உயர்ந்திருக்கிறோம். ரப்பர், சல்பேரிக் ஆஸிட் இவைகளின் உற்பத்தியிலே நாம் 14-வது இடத்தைப் பெற்றிருக்கிறோம்.

நல்ல பல முன்னேற்றங்கள் செய்து இருக்கிறோம். ஆனால் அந்த முன்னேற்றங்கள் மக்கள் மத்தியிலே பேசப்படவில்லை. இதற்கு என்ன காரணம்? இதற்கு எல்லாம் ஒரு தீங்கு இருக்கிறது என்றுதான் தெரிகிறது. என்ன காரணம் என்று அலசி ஆராய்ந்து பார்க்கும் போது இதை ஏதோ ஒரு சக்தி கீழே இழுக்கிறது என்று தோன்றுகிறது.

சிவகெங்கை குடும்பநலப் பட்டி மன்றத்தில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சா. சுப்பிரமணியன் அவர்கள் உரையாற்றுகிறார்.



இந்த முன்னேற்றத்தைக் கவிழ்க்கும்படியாக இன்னொரு முன்னேற்றம் இன்னொரு உற்பத்தி, ஒரு தடைக் கல்லாக இருந்தால் அது முன்னேற்றமாக இருக்கவே இருக்காது. என்ன உற்பத்தி? என்ன தடை இருக்கிறது என்று பார்த்தால், அதுதான் மனித உற்பத்தி, பல உற்பத்திகளை செய்து இருக்கிறோம். அதிலே நல்ல வெற்றி கண்டிருக்கிறோம். ஆனால் அந்த வெற்றிகளை விட ஜன உற்பத்தியிலே நாம் இன்னும் வெகு வேகமாக முன்னேறி வருகிறோம். எப்படி என்று பாருங்கள். 1921-ல் நம்முடைய ஜனத் தொகை 251 மில்லியன். பிறகு பாரதி பாடினனே ''31—32-லே 30 கோடி......'' அந்த காலத்தில் உயர்ந்து இருந்த ஜனத்தொகை 30 கோடி. இப்போது பாருங்கள். 1971-ல் இந்த ஜனத் தொகை 55 கோடியாக உயர்ந்து விட்டது. அதாவது 548 மில்லியன்களாக உயர்ந்து விட்டது. 1921-க்கும் 1971-க்கும் இடையே என்ன வித்தியாசம், 50 ஆண்டுகள். எனவே 50 ஆண்டுகளிலே நம்முடைய ஜன உற்பத்தி எவ்வளவு உயர்ந்து இருக்கிறது என்றால் 118% உயர்வு! யாரும் எட்ட முடியாத அளவுக்கு உயர்ந்து இருக்கிறோம் ஜனத்தொகை உற்பத்தியிலே!

நம் மக்களுடைய ஜனத்தொகை அளவில் உயர்ந்து விட்டது. பொருளாதாரம் தாழ்ந்து விட்டது. சராசரி எடை போட்டால், ஜன உற்பத்தி கீழே விழுகிறது. பொருளாதார உற்பத்தி மேலே தூக்கப்பட்டு விட்டது. ஆனால் ஜன உற்பத்தியிலே கட்டுப்படுத்தினால் நாம் பொருளாதார முன்னேற்றத்திலே உயர்ந்த ஒரு நல்ல நிலைக்கு வருவோம். இந்த நிலையிலே ஜன உற்பத்தி இருந்து கொண்டு இருக்கிறது.

நம் இராமநாதபுரத்தை பார்க்கும் போது மொத்தத்தில் அங்கு நெருக்கம் அதிகம். அதாவது ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 227 மக்கள் இருக்கிறார்கள். ஜனத் தொகை மிகவும் அதிகம். தாங்காது தாங்காது. இப்படியே விட்டு வைத்தால் இந்தியாவில் ஜனத்தொகை எந்த நிலைக்கு போகுமோ தெரியாது. இடமே இருக்காத நிலையில் போய்க் கொண்டு இருந்தால் பெரிய வீடு கட்டி குடியிருப்பது என்பது முடியாது. மனிதன் மேல் மனிதன் படுத்துக் கொண்டு தூங்க வேண்டிய நிலை ஏற்படும்.

நாம் சுதந்திரம் பெற்ற தினத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் நாம் உற்பத்தி செய்வது ஒரு ஆஸ்திரேலியாவை. ஆஸ்திரேலியா அளவுக்கு ஒரு ஜனத்தொகை உற்பத்தி செய்து கொண்டு இருக்கிறோம். ஒரு நிமிடத்திற்கு 1600 குழந்தைகளை பெற்றுக் கொண்டு இருக்கிறோம். ஒரு நாளைக்கு 60000 குழந்தைகளை பெற்றுக் கொண்டு இருக்கிறோம். இது தாங்

---

முன் பக்க பின்பக்க அட்டைகளில்............

அமெரிக்க அரசின் அழைப்பை ஏற்று, அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்த முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள், அமெரிக்க அரசு அலுவலர்கள் பலரோடு பல்வேறு பிரச்சனைகள் பற்றி கலந்துரையாடினர்.

---

குமா? இந்த நிலை நீடிக்க வேண்டியதுதானா? நன்கு யோசனை செய்து பார்க்க வேண்டும். எனவேதான் இந்த உண்மைகளை எல்லாம் நன்கு கண்ணுற்று, ஜனக் கட்டுப்பாடு நிச்சயமாக தேவை, குடும்பக் கட்டுப்பாடு தேவை என்பதை நன்கு உணர்ந்து சிரமேற்கொண்டு அதற்கான வழி வகைகளை கடைபிடித்து நடக்க வேண்டும்.

அதற்கு பல வழி வகைகளை அரசாங்கமே ஏற்படுத்தி வந்திருக்கிறது. அவைகளிலே முக்கியமாக வருவது அறுவைச் சிகிச்சை. அதற்கு அடுத்தது மாத்திரைகள் மூலமாக குழந்தைகள் பெறுவதை கட்டுப்படுத்துவது. ஆனால் மாத்திரைகளை தம்பதிகள் அவர்கள் சந்தோஷமாக இருக்கும்போது உபயோகிக்க வேண்டும். ஆனால் அவர்கள் தவறிப் போய் வாயில் போட்டுக் கொள்கிறார்கள். எப்படி உபயோகிக்க வேண்டும் என்று அவர்கள் நன்றாக கற்றுக் கொள்ள வேண்டும். மற்ற ஒரு நல்ல முறையும் உண்டு. அதாவது 'சேப் பீரியட்' நாட்கள். சில நாட்களை மட்டும் ஒதுக்கி விட வேண்டும். மாதவிடாய் கழிந்த 10 நாட்கள் சந்தோஷமாக இருக்கலாம். பிறகு ஒரு வார காலம் அவர்கள் கழித்து பிறகு சந்தோஷமாக இருக்கலாம். நான் இந்த முறையைத்தான் அனுசரித்தேன். எனக்கு இப்போது 3 குழந்தைகள் பிறந்திருக்கின்றன. அதற்கு நல்ல கட்டுப்பாடும் தன் உணர்வும் வேண்டும். எனவே இந்த வழிகளை எல்லாம் நன்கு யோசித்து இன்று இந்தக் கூட்டத்திற்கு வந்து, நல்ல பல திட்டங்களை கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய தலைமை உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

பட்டி மன்றம் நடுவர் பேராசிரியர் எஸ். சாலமன் பாப்பையா.




15988)



திரு. வெ. நாமதேவன்

# மன மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்!

[துணை இயக்குநர் திரு. வெ. நாமதேவன் அவர்கள் பட்டிமன்றத்தை துவக்கி வைத்து பேசுகையில் குறிப்பிட்டதாவது :]

இந்தப் பட்டிமன்றம் ராமநாதபுரம் மாவட்ட குடும்பநலத்திட்ட அலுவலகத்தின் சார்பிலேஏற்படுத்தப்பட்டது. இந் நாட்டிலே, மக்கள் மத்தியிலே குடும்பநலத் திட்டத்தின் முக்கியத்துவத்தை நன்மைகளை எடுத்துக் கூறி அவர்கள் மத்தியில் ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற காரணத்தினால் தான் இது போன்ற பட்டிமன்றங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் பட்டிமன்றத்துக்கு தலைமை ஏற்றிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெள்ளத் தெளிவாக பல விஷயங்களை எடுத்துக் கூறினார்கள். அவர் உழைப்பால் உயர்ந்தவர். உழைப்பாளிகளின் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்தவர். அடித்தள மக்களுக்கு நன்மை புரிய வேண்டும் என்று மனமாற அறிந்தவர். அதற்காக இதுபோன்ற பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களின் மக்களின் துயர்களை களையவேண்டுமென மனமாற உணரும்இதுபோன்ற மாவட்ட ஆட்சித் தலைவர் கிடைத்திருப்பது மிக்க மகிழ்ச்சிக்குரியது. அவர்கள் இந்த விழாவிற்கு தலைமை ஏற்று சிறப்பிக்க வந்ததற்கு நமது குடும்பநலத் திட்டத்தின் சார்பாக முதற்கண் நன்றியை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மத்திய மாநில அரசுகள் குடும்ப நலத் திட்டத்தினால் விளையும் நன்மைகளை நாடு முழுவதும் எடுத்துக் கூற வேண்டுமென்பதற்காக இந்த ஆண்டு தமிழ்நாடு அரசு குடும்பநல விளம்பரப் பணிக்காக ஏறத்தாழ 14 லட்சம் ரூபாய் மானியமாக மத்திய அரசு வழங்கியிருக்கிறது. சென்ற ஆண்டு விளம்பரத்திற்காக—விளம்பரப் பிரிவிற்காக 8 லட்ச ரூபாய்தான் மத்திய அரசுவழங்கியது.

எண்ணித் துணிக கருமம்—துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

என்று வள்ளுவர் சொன்னார். அதாவது ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு முன் இக்காரியத்தைச் செய்வது சரிதானா, இதற்கு இதனால் ஏற்படும் நன்மை என்ன என்பதை நன்றாக யோசிக்க வேண்டும். யோசித்து இந்தக் காரியத்தில் ஈடுபட்ட பின்பு அதைப்பற்றி சிந்திக்கிறோம்.

10 பிள்ளைகளை எப்படி வைத்து காப்பாற்றுவது என்பது பெற்ற பிறகு தான் அவர்களுடைய குறைகள் தெரிகிறது. தலைவர் அவர்கள் சொன்னார்கள் தன்னடக்கத்தின் மூலமாகவே 3 குழந்தைகளோடு நிறுத்தி விட்டதாக. ஆகவே இதிலே நாம் நிரந்தர முறைகள் என்ன, தற்காலிக முறைகள் என்ன என்பதை நாட்டு மக்களுக்கு சொல்லி வருகிறோம்.

தமிழ்நாடு அரசு இந்தத் திட்டம் தொடங்கி அதாவது 1960 முதல் இன்றுவரை 29 லட்சம் பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்துள்ளது. இந்தியாவிலேயே குடும்ப நலத் திட்டத்தில் தமிழகம் எப்போதுமே முன்னோடியாக இருந்து வந்திருக்கிறது. நாம் சுதந்திரம் பெறுவதற்கு முன்பு 1000 பேர்களுக்கு அதாவது இறப்பு விகிதம் என்று சொல்கிறோமே 1000 பேர்களுக்கு இறப்பவர்கள் 1974-க்கு முன்னாலே 39 ஆக இருந்தது. ஆனால் சுதந்திரம் பெற்ற பிறகு நாம் கிராமம் தோறும், பட்டி தொட்டிகள் தோறும் மருத்துவ வசதிகள் பெருக்கியிருக்கியிருக்கிறோம். அதன் காரணமாக இறப்பு விகிதம் இப்போது 39-ல் இருந்து 15-ஆக குறைக்கப் பட்டுள்ளது. ஒரு பக்கம் இறப்பு விகிதத்தைக் குறைத்துள்ளோம். மறுபக்கம் பிறப்பு விகிதத்தை அதிகரித்துள்ளோம். இறப்பு விகிதம் குறைந்து பிறப்பு விகிதம் அதிகரித்துள்ளதின் காரணமாக நாம் உணவு உற்பத்தியை எவ்வளவு பெருக்கினாலும் இரண்டையும் ஈடுகட்டுவது முடியாத காரியம் என்பதை கண்கூடாக கண்டு இருக்கிறோம். இதற்கு வழி என்னவென்றால் ஒன்று மக்கள்—ஆண்கள் பெண்கள்—எல்லோரும் நன்றாக கல்வி அறிவை அடைய வேண்டும்..

ரஷியாவை எடுத்துச் சொன்னார்கள். ரஷ்யாவில் 75 சதவிகிதம் பெண்கள் அன்றாடம் வேலைக்குச் செல்பவர்களாக இருக்கிறார்கள். அலுவலகத்திற்கு செல்கின்ற தகுதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றால் காப்பாற்ற முடியாது என்பதை உணர்ந்திருக்கிறார்கள்.

மற்றொன்று இப்போது மத்திய அரசு திருமண வயதை பெண்களுக்கு 18-ஆகவும் ஆண்களுக்கு 21-ஆகவும் உயர்த்தியுள்ளது. அதனாலாவது சில காலத்திற்கு குறைந்த அளவு பிள்ளைகளை பெற்று, கட்டுப் படுத்த முடியும் என்ற காரணத்திற்காக இந்த திருமண வயதை உயர்த்தியிருக்கிறார்கள். இன்னும் நன்றாக படித்த இளைஞர்கள் 21 வயது என்பதை 26, 28 என்று உயர்த்திக் கொள்ளலாம். அதன் மூலமாக அவர்கள் வாழ்க்கையில் நிரந்தர நிலையான உத்தியோகத்தை அடைந்த பிறகு திருமணம் செய்து கொள்வார்களேயானால், அவர்கள் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவார்கள்.

ஆகவே கிராமப் புறங்களிலே இருக்கக் கூடியவர்கள் பொதுவாக இது போன்ற பட்டிமன்றங்களிலே கலந்து கொள்ளும் போது என்ன சொல்கிறார்கள் என்பதை நன்கு அறிய வேண்டும். குறிப்பாக ஆசிரியப் பெருமக்கள் இதற்கு பெரிதும் உறுதுணையாக இருக்க வேண்டும். ஏனெனில் ஆசிரியப் பெருமக்கள் அந்தந்தப் பகுதியிலேயே கருத்து அறிவிக்கக் கூடிய தலைவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் சொல்வதற்கு மதிப்பு கொடுக்கிறார்கள். ஆகவே ஆசிரியப் பெருமக்கள் இந்தக் குடும்ப நலத் திட்டத்திற்கு பெரிதும் ஆதரவு கொடுக்க வேண்டும். ஆங்காங்கே கிராம மக்களை சந்திக்கும் போது குடும்ப நலத் திட்டத்தைப் பற்றி எடுத்துக் கூற வேண்டும். அதுவும் குறிப்பாக தமிழகத்திலே குடும்பநலத் திட்டத்தை பொறுத்த வரை எந்தவித ஜாதி எதிர்ப்பும் இல்லை. எல்லா மதத்தினரும் எல்லா கட்சியினரும் எல்லோரும் ஒருமித்த ஆதரவை குடும்ப நலத் திட்டத்திற்கு அளித்து வருகிறார்கள். ஆகவேதான் இதுபோன்ற பிரச்சாரப் பணியின் மூலம் மக்களுக்கு எடுத்துக் கூறும் பணியை மேற் கொண்டு இருக்கிறோம்.

இன்று இங்கே நடத்தப்பட இருக்கும் பட்டிமன்றத்திற்கு கொடுக்கப் பட்டு இருக்கும் தலைப்பு "குடும்ப நலத் திட்டம் வெற்றி பெறுவதற்கு பெரிதும் துணை நிற்பது சட்டமே— என்ற அணியிலே சில பேரும் மன மாற்றமே என்ற அணியிலே சில பேரும் பேச இருக்கிறார்கள். அவர்கள் பேசிய பின் நடுவர் அவர்கள் தீர்ப்பை வழங்க இருக்கிறார்கள். இந்த பட்டி மன்றத்தை இங்கே துவக்கி வைப்பதிலே நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.



டாக்டர் ஆர். புவராஜ் சிங்

# திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்

[நடுவர் பேராசிரியர் எஸ். சாலமன் பாப்பய்யா அவர்களின் துவக்கவுரை.]

துணை இயக்குநர் அவர்கள் பட்டிமன்ற தலைப்புக்குள்ளே சஞ்சாரஞ் செய்கிறார் என்ற பரபரப்பு அடிக்கடி ஏற்பட்டது. நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. என்னடா இவரே தீர்ப்பு கூறி விடுவாரோ என்ற பரபரப்பு இங்கும் அங்கும் ஏற்பட்டது. அந்தக்கவலை உங்களுக்கு வேண்டாம். நல்ல பேச்சாளர்கள் பேச இருக்கிறார்கள். நல்ல செய்தி கிடைக்கப் போகின்றன. அந்தச் செய்திகளைக் கொண்டு நாம் முடிவு எடுக்கப் போகிறோம்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உண்மையைத் துணிவாகக் கூறினார்கள். அந்தத் துணிவு நமக்கு வேணுமில்லையா? நானும் சொல்லலாமென்று பார்க்கிறேன். எனக்கு இரண்டு குழந்தைகள்தான், திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம் அப்படித்தான். என்னடா இந்த ஆளே இந்தத் திட்டத்தை சேர்ந்தவரா என்று பயப்பட வேண்டாம். பட்டி மன்றம் அதன் பணியை ஒழுங்காகச் செய்யும். கவலைப்பட வேண்டியதில்லை. எப்படியோ சில அசைவுகளைப் பற்றி அங்கும் இங்குமாக பேசித் திரிவது வழக்கம். எங்களுக்குத் தெரிஞ்சதே அதுதான். மாவட்ட ஆட்சித்தலைவர் எவ்வளவு புள்ளி விபரம் கொடுத்தார்கள். எவ்வளவு தெளிவான பேச்சு அது. நமக்கு தேவை. ஆனால் நாங்க சொல்லப்போறதெல்லாம் நடைமுறையிலே என்ன இருக்கு. இந்த நாட்டிலே ஒரு குடும்பத்திலே என்ன நடந்துகிட்டு இருக்கு, இதை எப்படி கண்ட்ரோல் பண்றது, கட்டுப்படுத்துவது, அதற்கு என்று என்ன முடிவு எடுக்கிறது என்பதைப்பற்றி அவர்கள் சொல்லப் போகிறார்கள்.

குடும்பக் கட்டுப்பாட்டை எப்படி ஏற்படுத்தலாம் என்று சிலர் சொல்லப் போறாங்க. பெரிய ஆட்கள். அறிவிலே பேர்போன ஆட்கள். நிறைய செய்தி வரப்போகுது. அரிய செய்திகள் வரும். நீங்க செவி கொடுத்து கேளுங்க. சிரிக்க வேண்டிய நேரத்திலே சிரிங்க. கைதட்ட வேண்டிய நேரத்திலே கைதட்டுங்க, சிந்தனை செய்ய பல் கருத்துக்கள் வரும். பின்பற்ற வேண்டிய கருத்துக்களைஇன்றே பின்பற்றுக. இன்று முடியலேன்னா நாளை முதலாவது பின்பற்றுங்க என்று சொல்லி பட்டி மன்றத்தைத் துவக்கி வைக்கிறேன். ——

# சட்டம் பலரைத் திருத்தும்!

[குடும்ப நலத் திட்டம் வெற்றி பெற பெரிதும் துணை நிற்பது சட்டமே என்ற அணியின் தலைவர் திரு. சொல் விளங்கும் பெருமான் குறிப்பிட்டதாவது]

எங்கள் குடும்ப நண்பர் குடும்பத்துடன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு பஸ்ஸில் அழகர் கோவில் சென்று கொண்டிருந்தார். குழந்தைகளைப் பார்த்த கண்டக்டர் "பள்ளிப் பிள்ளைகளையெல்லாம் அழைத்துக் கொண்டு அழகர் கோவிலை சுற்றிக் காண்பிக்க போகிறீர்களா?" என்று கேட்டார். "அதற்கு உனக்கு வேலை இல்லையா? இவையெல்லாம் என் பிள்ளைகள்!" என்று அந்த அம்மா சொன்னார்கள். குழந்தைகள் எல்லாம் மிகுந்த சேட்டை செய்கின்றனவே. ஒன்றிரண்டு குழந்தைகளை வீட்டில் விட்டு விட்டு வந்திருக்கக் கூடாதா என்று கண்டக்டர் சொல்ல, அந்தம்மா சிலதுகளை விட்டு விட்டுத் தான் வந்திருக்கிறேன் என்றார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? குடும்பம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என்று தெரிகிறது. இல்லாவிட்டால் நாம் நினைப்பதற்கு எதிர்பதங்கள் ஏற்படும். அதற்கு மனமாற்றம் வேண்டுமா? சட்டம் வேண்டுமா? என்பது. அதற்கு மனமாற்றம் வேண்டுமென மறைமுகமாக அதிகாரி சொல்லிச் சென்றார்.

ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னார். சீனாவிலே இருக்கிற குழந்தைகள் போக இனி பிறக்கப் போகிற குழந்தைகள் 2-க்கு மேல் போனால் ரேஷன் கார்டு இல்லை என்று. அதனால் அங்கு பிறப்பு விகிதம் 1.8% சதவிகிதம் குறைந்தன. அவ்வாறு இல்லாததினால் 3.5% உயர்ந்துள்ளது இங்கு. நிக்க இடமில்லே. 2000-ம் ஆண்டிலே, ஆங்காங்கே அவரவர்களை தள்ளிக் கொண்டே போகணும். அப்படியும் போய்ச் சேர முடியாது. அதற்கு மனமாற்றம் ஏற்றதா? மனமாற்றம் எல்லாம் எத்தனை நாளைக்கு, உங்க மனமாற்றம் எனக்குத் தெரியாதா? மனிதன் சபலத்துக்குரியவன் அண்ணன் நன்கு சொன்னார். மனிதன் தீவிரமாக முடிவெடுக்கிறான். ஆனால் அங்கே போனா ஆசையோடு பேசி ரொம்ப நாளாச்சி அங்கேதான் ஆபத்து உருவாச்சி என்று. இதுதான் மனமாற்றம்.

அந்தக் காலத்திலே திருடன் திருடிக் கொண்டிருந்தான். மக்கள் அரசாங்கம் அவர்களைத் திருத்துவதற்குச் சொல்லிப் பார்த்தது. ஆனா முடியலே. கடைசியிலே திருடினால் தண்டனை என்று சட்டம் கொண்டு வந்தது. குற்றங்கள் குறைந்தன. அரேபியாவிலே திருடுபவர்களுக்குக் கையில் கட்டைவிரலை வெட்டுகிறார்கள். எனவே கட்டை விரல் போய் விடுமோ என்று பயந்து திருடுவதை நிறுத்தி விடுகிறான். எனவே குற்றங்கள் குறைகிறது.

அன்று முப்பது கோடி முகம் என்று பாரதி சொன்னான். இன்று எனது தாய்க்கு 120 கோடி கைகள். 60 கோடி முகம். அதில் 15 கோடி மாணவர்கள். அவர்களிடம் நீ எத்தனாவது குழந்தை என்று கேட்டால் அதைக் கேட்க நீ யார் என்கிறான். ஜி.டி. நாயுடு 16-வது குழந்தை. ஜஸ்டின் 13-வது குழந்தை. கி.ஆ.பெ. விசுவநாதம் 14-வது குழந்தை.

மதுவிலக்கு இருக்கிறதே...குடிப்பது பற்றி வள்ளுவர் ஒரு அதிகாரமே எழுதி இருக்கிறார். குடிக்கிறவனைத் திருத்துவது என்பது கையிலே ஒரு தீப்பந்தத்தை எடுத்துக் கொண்டு தண்ணியிலே போய் தேடுவது போல அவ்வளவு கஷ்டம் என்று உவமை எல்லாம் சொன்னான். இளங்கோ, குடிப்பது பிறரைக் கொல்வது போல என்றார். இவர்கள் ஏமாந்து விட்டார்கள். மனமாற்றத்திற்குப் பல இலக்கியங்கள் எழுதினார்கள். ஆனால், அவ்வளவு பேரும் தோற்று விட்டனர். ஆனால் சட்டம் வந்தது. அவனவன் பயந்தான். அப்படியும் குடிக்கிறவன் குடித்துக் கொண்டு இருக்கிறான். குடிக்காதவன் குடிக்காமலே இருப்பான். ஆனால் இடையில் உள்ள 90% குடிக்கிறவங்களைத் தடுத்து நிறுத்தியது சட்டம். அது மனமாற்றத்தால் ஏற்பட்டதல்ல.

ஒருவன் சொல்கிறான். முதல் குழந்தை பிறந்ததும், அவனை ஐ.ஏ.எஸ். ஆக்குவது என்று. இரண்டாவது குழந்தை பிறந்ததும் ஒரு டாக்டராகவும் ஒருவனை

4:52:5 ... 211, N71
N78-8.8

இஞ்சினியராகவும் ஆக்குவது என்று. 4வது குழந்தை பிறந்ததும் எம்.ஏ. ஆக்குவேன் என்று. 5-வது குழந்தை பிறந்ததும் ஒரு டிகிரியாவது ஆக்க வேண்டும் என்று. 6-வது குழந்தை பிறந்ததும் மத்தவனை ஒரு சைக்கிள் கடையிலாவது வேலைக்கு அனுப்ப வேண்டும் என்று. இந்த நிலைக்கு அவன் வரக்காரணம் மனமாற்றத்தினால் அல்ல. தன்னைக் காப்பாற்ற ஒரு அரசாங்கம் இருக்கிறது என்ற தெம்பில் இருக்கிறான். அந்த அரசாங்கம் அவனைக் கை விட்டுவிடும் என்ற அச்சம் அவனுக்கு இருந்திருந்தால் 2-க்கு மேல் பெற ஆயிரம் தடவை யோசிப்பான். இந்த ஜென்மத்திற்கு போதும் என்று நினைப்பான்.

மனமாற்றம் என்பது ஏதோ ஒரு சிலரை மாற்றும். ஆனால் சட்டம் பலரைத் திருத்தும். ஆகவே மன மாற்றம் என்பது சில சாமியார்களுக்குத்தான்என்றும் சட்டம்தான் குடும்ப கட்டுப்பாட்டிற்கு சிறந்தது என்றும கூறி விடைபெறுகிறேன்.

## சட்டத்துக்கு எப்போது உயிர் வரும் ?

[குடும்பநலத்திட்டம் வெற்றி பெற துணை நிற்பது மனமாற்றமே என்ற அணியின் தலைவர் டாக்டர் திருமதி சக்தி பெருமாள் கூறியதாவது :]

தீண்டாமை குற்றம் என்றும், ஜாதியின் பெயரால் தீண்டத்தகாதவர்கள் என்று சொல்வதும் குற்றம் என்றும் சட்டத்தில் இருந்தாலும், நடைமுறையில் இல்லை. வரதட்சனை வாங்குவதும் கொடுப்பதும் குற்றம் என்று சட்டத்தில் இருந்தாலும், சட்டமியற்றிய மந்திரிகள் வீடு முதல் அனைத்திலும் வரதட்சனை கொடுமை இருந்து வருகிறது.

பெண்களுக்குச் சொத்துரிமை, சம வேலைக்குச் சம ஊதியம் என்று சட்டம் இருந்தாலும், எத்தனை பெண்களுக்கு அது தெரியும்; அந்த சட்டம் எத்தனை பேருக்குப் பலனளித்து வருகிறது.

சட்டத்திற்கு எப்போது உயிர் வரும் என்றால் மக்கள் மனமாற்றத்தினால் தான். சட்டம் எழுத்தளவிலே இருக்கும்.. சட்டத்தில் பல ஓட்டைகள் உள்ளன.அதில் பலர் ஒளிந்து கொள்கிறார்கள். எந்த ஒரு சட்டத்திலும் விதிவிலக்கு உள்ளதல்லவா? அதில் பலர் பலனடைந்து விடுகிறார்கள். நமது நாட்டில் லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றம் என்று சட்டம் உள்ளது. சட்டம் என்பது ஏழைகளை அச்சுறுத்துவதுதான். ஆனால் எங்கு லஞ்சம் வாங்காமல் இருக்கிறார்கள். 5 ரூபாய் திருடினால் அவனுக்கு அடி உதை, ஆனால் அதே 5 லட்சம் திருடுபவனுக்குச் சிறையில் பல வசதிகள்.

குடும்ப நலத்தில் சட்டம் கொண்டு வந்தால், வசதியுள்ளவர்கள் அந்தச் சட்டத்தின் மீது அமர்ந்து கொண்டு ஆட்சி புரிந்து கோடிக்கணக்கான ஏழைகளை நசுக்கி விடுவார்கள். மன மாற்றத்தினால் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள தாய்மார்களிடம் இந்தக் கருத்துக்கள் பரவினால்தான் இத்திட்டம் வெற்றி பெற முடியும்.

மக்களுக்குக் கல்வி அறிவு புகட்டி அத்துடன் குடும்ப நலக் கருத்துக்களையும் கூறினால்தான் வெற்றி பெற முடியுமேயன்றி, சட்டத்தினால் செய்து விட முடியும் என்று சட்டம் இயற்றினால், அது கண்காட்சிப் பொருளாகவே இருக்கும்.

ஆகவே சட்டம் பயன்படாது, மன மாற்றம் தான் சிறந்தது

## மனம்போல் நடந்தால் நாடு என்னவாகும் ?

[சட்டமே என்ற அணியைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. பில்லப்பன் கூறியதாவது.]

இன்றைய நிலையில் குடும்பநலத் திட்டம் வெற்றிபெற வேண்டுமானால் மனமாற்றத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்காமல், சட்டத்தின் மூலமாகவே சாதிக்கலாம். சட்டப்படி பார்த்தால் ஒருவருக்கு ஒருமனைவிக்கு மேல் இருக்கக் கூடாது. ஆனால் முகமதியர்கள் வழக்கப்படி பார்த்தால் அவர்கள் 4 மனைவிகளை மணமுடித்துக் கொள்ளலாம்.

ஒரு குற்றவாளியைப் பிடித்து தண்டனை கொடுக்கும் போது குற்றவாளியை, தான் மனம் மாறிவிட்டதாக சொன்னால் அவனை விடுதலை செய்து விட முடியுமா? சட்டப்படி அவனுக்குத் தண்டனை தர வேண்டி இருக்கிறது. அந்தத் தண்டனைக் காலம் அவனுக்குச் சிறந்த மனமாற்றத்தை அளிக்கும். அளிக்கிறது. தண்டனை காலத்திற்குப் பிறகாவது தண்டனை முடிந்து வெளியே வந்த பிறகாவது அவன் திருந்தி நல்லவனாக மாற வகை செய்கிறது சட்டம்.

சட்டம் என்றுஒன்று இல்லையானால், அவர் அவர்கள் தங்கள் மனம் போன படி நடந்து கொண்டால் சீரழிவுதான் அதிகமாயிருக்கும். அரசு அலுவலர்கள் 2 குழந்தைகளுக்குமேல் பெற்றுக் கொண்டால் சட்டப்படி அவர்களுக்கு பல தண்டனைகள் அளிக்கப்படும். அவர்களுடைய வேலைக்குக் கூட தீங்கு நேரலாம், என்று சில மாநிலங்கள் சட்டமியற்றி அமல் படுத்தி வந்தது உண்மை. அந்த மாதிரி சட்டங்கள் எல்லா மாநிலங்களுக்கும் பரவினாலும் பரவும் என்ற நிலையும் இருந்தது. சட்டத்தின் மூலமாகத் தான் இதை சாதிக்க முடிந்தது.

மனமாற்றம் என்பது ஒரு சிறு வழி. அவ்வளவுதான்; சட்டம் தேவையில்லை. அவரவர்கள் மனதினை மாற்றிக் கொள்ளுங்கள். உங்கள் மனம் போல் நடந்து கொள்ளுங்கள் என்றால் இன்றைய நிலையில் நாடு என்னாகும்? மனமாற்றம் வேண்டுமானால் அந்த மனமாற்றத்திற்கே துணைசெய்வது சட்டம்தான். ஒரு பெட்டி இருந்தால் அதில் பெரிய பூனை செல்வதற்கு ஒரு பெரிய துவாரமும், சிறிய பூனை செல்வதற்கு ஒரு சிறிய துவாரமும் போடத் தேவையில்லை. பெரிய பூனைக்குப் போடும் பெரிய துவாரத்தின் வழியாகவே சிறிய பூனையும் செல்வது சாத்தியமாகையால், சிறிய பூனைக்கென்று சிறிய துவாரம் தேவையில்லாதது. அதுபோல் சட்டம் என்ற பெரிய துவாரமே போதுமானது. குடும்ப நலத்திட்டத்தை மேற்கொள்வதற்கு சட்டம் என்ற பெரியதுவாரமே போதுமானது. மனமாற்றம் என்ற சிறிய துவாரம் மிக அவசியம் என்பது சரியில்லை. எனவே குடும்ப நலத் திட்டத்தின் வெற்றிக்கு சட்டமே முக்கியமானது.

## மனமாற்றமே வெற்றிக்கு அடிகோலும் !

[மனமாற்றமே என்ற அணியைச் சேர்ந்த திரு.வி. ஆர். நாகராஜன் சொன்னதாவது:]

சட்டத்தால் எதையும் சாதித்து விடலாம் என்று செம்மாந்திருக்கும் எதிர்கட்சி நண்பர்களுக்கு மன மாற்றமே குடும்ப நலத் திட்ட வெற்றிக்கு காரணமாக முடியும் என்று கூறிக் கொள்ளுகிறேன்.

சட்டத்தின் மூலமாக எதையும் சாதிக்கலாம் என்று இருந்த ஒரு அரசியல் கட்சி தேர்தலின் போது வடநாட்டில் படுதோல்வியுற காரணமாயிருந்தது அந்தச் சட்டமே. அந்த சட்டத்தின் மூலம் கட்டாயமாக்கப்பட்ட குடும்ப நலத்திட்டமே என்பதை நான் வலியுறுத்துகிறேன். அறிஞர் அண்ணா சொன்னது ''சட்டம் என்பது தீயைப் போன்றது, அது வெளியே தெரிவதற்கு மனமாற்றம் என்ற ஜுவாலையும் வேண்டும்'' என்பது. அவரும் சட்டத்தைவிட மனமாற்றம் வேண்டுமென்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார். பிரதமர் மொரார்ஜி அவர்களும் இந்த மன மாற்றத்தை பெரிதும் வலியுறுத்தி இருக்கிறார்.

சட்டத்தால் மனிதர்களைப் பணிய வைக்கலாம். ஆனால் மனமாற்றத்தை உண்டு பண்ண முடியாது. காந்திஜியும் இது பற்றி வலியுறுத்தி இருக்கிறார் தனது உரைகளில். சட்டத்தால் முடியாததும் உண்டு. சட்டத்திற்கு வலிவே இல்லை என்பதற்கு ஒரு உதாரணம். எனது நண்பர் ஒருவரை சந்தித்த போது அவர் சொன்னார்: தனது மனைவியை இரண்டாவது பிரசவத்திற்காக ஊருக்கு அனுப்பி இருப்பதாக. அவருக்கு ஏற்கனவே ஒரு குழந்தை உண்டு. எனவேஇரண்டாவது குழந்தை பிறந்ததும் ஆபரேஷன் செய்து விடச் சொல்லி தனது மாமனாருக்கு செய்தி அனுப்பி இருப்பதாகச் சொன்னார். அவரது மனப்பான்மையைக் கண்டு நான் மகிழ்ந்தேன். ஒருநாள் அவர் மாமனாரிடமிருந்து தந்தி வந்தது. அப்போது நானும் அவருடன் இருந்தேன். தந்தியைப் பிரித்து படித்ததும், அவர் முகம் போன போக்கைப்பார்த்து தந்தியில் வந்தச் செய்தி என்னவோ ஏதோ என்று நானும் குழம்பினேன். தந்தியை வாங்கிப் பிரித்து படித்தேன். மாமனார் கொடுத்த தந்தி இது தான். ''உங்கள் மனைவிக்கு மூன்று குழந்தைகள் பிறந்திருக்கின்றன'' என்பது தான். இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொன்னவர்தான். அனால் இப்போது அவருக்கு இருப்பது முதலில் ஒன்று இப்போது மூன்று. 4 குழந்தைகள் ஆகிவிட்டன. சட்டப்படி அவருக்கு இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருக்கக் கூடாதுதான். ஆனால் ஒரே பிரசவத்தில் பிறந்துவிட்ட 3 குழந்தைகளால் மொத்தம் நான்கு குழந்தைகள் ஆகிவிட்டதே! இதைச் சட்டம் எப்படி தண்டிக்கப் போகிறது. இதைப் பார்க்கும் மற்ற அலுவலர்கள் அவருக்கும் 4 குழந்தைகள் எனக்கும் 4 குழந்தைகள் தானே? எனக்கு மட்டும் சட்டம் நடவடிக்கை எடுப்பது சரியா? என்று வாதிட மாட்டார்களா? இதற்கு எப்படி முடிவு எடுக்க முடியும்—சட்டத்தால் மட்டும் எதையும் சாதித்துவிட முடிவதில்லை. சட்டத்தை அதன் சாராம்சத்தை ஏற்றுக் கொள்வதற்கும் மனப்பக்குவம் தேவை. அது மனமாற்றமே. எனவே சட்டத்தைவிட மனமாற்றமே வெற்றிக்கு அடிகோலுகிறது.

## பயத்தின் அடிப் படையில்தான் மன மாற்றம் ஏற்படும் !

[சட்டமே என்ற அணியின் சார்பில் திருமதி ராஜம் மரகதம் அவர்கள் கூறியதாவது :]

மனமாற்றத்தால் எதையும் சாதித்து விடலாம் என்று பேசியிருக்கும் அருமைச் சகோதரருக்கு ஒன்று கூற விரும்புகிறேன். இது வரை அதாவது பாரதி பாடினனே 30 கோடி முகங்கள் என்று. அது இன்று 60 கோடியாக உயர்ந்து நிற்கிறது. சகோதரர் கூறுவது போல் மனமாற்றம் ஏற்பட்டு இருக்குமானால், நம்நாடு சுபிட்சமாக வாழ வேண்டும் என்ற உண்மையான எண்ணம் மக்களிடையே தோன்றியிருக்குமானால், அன்றைக்கிருந்த 30 கோடி மக்கள் தொகை 25 கோடியாக குறைந்தல்லவா இருக்க வேண்டும்? இப்போது 60 கோடியாக உயர்ந்திருக்கிறதே? அதற்கு என்ன காரணம்?

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். மிசா சட்டம் வந்திருந்த போது ஒவ்வொரு ஆசிரியர்களும் ஒவ்வொரு ஆசிரியையும் 2 கேசாவது போட வேண்டும் என்று இருந்த போது, நாங்களும் அந்த இரண்டு கேசை போட வேண்டிய நிலையிலிருந்தோம். நானும் எனது சக ஆசிரியைகளுமாக ஒரு வீட்டில் போய் அங்கிருந்த அம்மையாரிடம் ''அம்மா உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? என்று கேட்டேன். அதற்கு அந்த அம்மாள் ''எனக்கு எத்தனை குழந்தைகள் இருந்தால் உனக்கென்ன? நீயார் அதைக் கேட்க?'' என்று கோபமாக பேசினார்கள். உடனே நான் ''நாங்கள் அரசாங்கச் சட்டத்தின் பேரில் வந்திருக்கிறோம். அதனால்தான் கேட்கிறோம்'' என்று கூற, அந்தப் பெண்மணி எனக்கு 9 குழந்தைகள் என்று சொன்னார். உடனே நான் ''9 குழந்தைகளா ? சட்டப்படி 2 குழந்தைகளுக்கு மேல் இருந்தால், ரேஷன் கிடையாதே என்று சொல்ல, அந்தப் பெண்மணி உடனே ''ஐயோ, இது எனக்குத் தெரியாமல் போயிற்றே தெரிந்திருந்தால் நான் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றிருக்க மாட்டேனே! என்று சொன்னார்கள்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? சட்டம் என்ற ஒன்று நம்மை தண்டிக்கும். தண்டிப்பதற்காக காத்துக் கொண்டிருக்கிறது என்பது தெரிந்தால் அதற்காகவாவது மக்கள் தங்கள் மனதை மாற்றிக் கொள்கின்றனர். மக்களின் விருப்பப்படி அவர்கள் விரும்பும்போது மனம்மாறி குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளட்டும், அதுவரை காத்துக் கொண்டிருப்போம் என்று இருந்தால் இந்தியாவின் நிலைமை என்னவது? ஆண்டொன்று போனால் வாண்டொன்று பிறக்கின்ற இன்றைய நிலையிலேசட்டம் இன்றியமையாதது. சட்டத்தின் மூலமாகவாவது ஓரளவுக்கு நிலைமையை சீர்படுத்தலாம் என்ற எண்ணமே இதற்குக்காரணம். மனமாற்றம் என்பது தானாகவே ஏற்படும் என்று காத்துக் கொண்டிருந்தால், அது நிச்சயம் நன்மையை கொடுக்காது. சட்டம் என்று ஒன்று இருக்கிறது. அதற்கு நாம் பணிய வேண்டும் என்ற எண்ணம் இதயத்தில் கொஞ்சமாவது இருந்தால்தான் மக்களுக்குப் பயன் உண்டாகும். அதன்பயனாக மன மாற்றமும் ஏற்படும். பயமும் மனமாற்றமும் ஒன்று என்றால் இல்லை. ஆனால் அந்தப் பயத்தின் அடிப் படையிலாவது மனமாற்றம் உண்டாகுமானால், அது வரவேற்கத்தக்கது. ஆனால் சட்டத்தின்மூலமாக ஒன்றுமே சாதிக்க முடியாது என்று சப்தமிட்டுக் கூறும் சகோதரர்கள் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும்.

பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், குடும்பநல இருவார விழாவை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ரா. சண்முகம் தொடங்கி வைத்தார். திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை குடும்ப நலத்துறை தலைமை மருத்துவர் டாக்டர் காந்திமதி உரையாற்றுகிறார்.



# நெஞ்சில் நல்ல விதைகளை விதையுங்கள் !

[மனமாற்றமே என்ற அணியைச் சேர்ந்த திரு. இராஜாராம் கூறியதாவது:]

எனக்கு முன் பேசிய அருமைச் சகோதரி அவர்கள் கூறினார்கள். ஆண்டொன்று போனால் வாண்டொன்று பிறக்கின்றதென்று. அவர்கள் சொந்த அனுபவத்தை இங்கு யார் கேட்டது? அவர்கள் கேசுக்காக சென்ற போது 9 குழந்தைகள் பெற்ற தாய் ஒருவரைப் பற்றிச் சொன்னார்கள், அவர்கள்கூட 9 குழந்தைகள் பெற்ற பிறகுதான், ஐய்யய்யோ என்றார்களே தவிர அதன் முன்னமேயே நாம் குறைவாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொள்ளவில்லை.

சட்டம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சட்டத்தின் மூலம் சாதிக்க முடியும் என்றால் அதை எப்போதோ சாதித்து இருக்கலாம். எனவே சட்டத்தின் மூலம் மனமாற்றத்தை உண்டு பண்ண முடியும்என்பது வீண் வாக்குவாதம். மனமாற்றம் என்பது தன்னால் வர வேண்டியது. நான் கேட்கிறேன் இதுவரை செய்த அறுவைச் சிகிச்சைகளைச் சட்டத்தாலா செய்தீர்கள்? இல்லை. நீங்கள் சொல்கிற முறை, அதனால் ஏற்படுகிற நிலை, மனமாற்றத்தால் ஏற்படக் கூடியது.

இன்றைய இந்தியாவில் 11 கோடி பேர் தம்பதிகளாக வாழ்கிறார்கள். இன்னும் 9 கோடி மக்கள் தம்பதிகளாகக் கூடிய பருவத்தில் இருக்கிறார்கள். இவர்கள் நெஞ்சில் நல்ல விதையை விதையுங்கள். இந்த நாட்டிற்கு 2 பேர் போதும் என்ற எண்ணம் வேண்டும். இதை அதிகாரிகளால் மட்டும் செய்ய முடியாது. நம்மைநாமே தார்மீக முடிவு செய்தாலன்றி மறுமலர்ச்சி காண முடியாது. அப்படியன்றி சட்டத்தின் வாயிலாக இப்படித்தான் என்றால் வெல்ல முடியாது. உலகத்தில் எந்த ஒன்றும் சட்டத்தினால் வென்றதாக இல்லை. சட்டம் தோற்கும். இந்த நாட்டில் கவிஞர்கள் பாடுகிறார்கள்.

''கண்ணீர் உப்பிட்டு காவிரி நீரிட்டு
கலயங்கள் ஆடுது சோறின்றி
இதயங்கள் ஏங்குது வாழ்வின்றி''



அப்படித்தான் அவன் வீட்டில் கஞ்சிக்குப் போடுவதற்கு உப்பில்லை. கண்ணீர் துளிகள் உப்பாகிறது. அவர்களது இதயங்கள் ஏங்குகிறது வாழ்வின்றி.

இந்த நிலைதான் நமது நாட்டில் பெரும்பாலோருக்கு. அவர்களின் சராசரி வருமானம் ஒரு ரூபாய்க்கும் கீழேதான். அப்படிப்பட்ட நிலையின்றி வாழவேண்டுமென்றால், நமக்காக அல்ல, உனது நலத்திற்காக—உனது வாழ்விற்காக இரண்டோடு நிறுத்திக் கொள். உன்னிடம் உள்ள வசதியில் எத்தனைப் பேர் படிக்க முடியும். உன்னுடைய மகன் நன்கு வர வேண்டும் என்று நினைக்கிறாயா இல்லையா? அப்படி எண்ண வேண்டுமென்றால், நமக்கு நிச்சயம் அந்த உணர்வு வர வேண்டும்.

மனமாற்றம் ஏற்படவில்லையென்றால், அதற்குக் காரணம் படித்தவர்கள்-கற்றவர்கள் - நினைக்கிறவர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்ற தவறியதால்தான். இன்றைய பட்டதாரிகள் நான்கு சுவருக்குள் தங்களை அடக்கிக் கொள்கிறார்கள். மக்களின் வரிப்பணத்தில் கல்வி கற்று வந்த நமக்கு ஒரு கடமை இருக்கிறது,என்று நினைத்தால் நிச்சயம் மனமாற்றம் ஏற்படும்.

மனித மனத்திற்கு ஆற்றல் அதிகம். மனமாற்றத்தால் எதையும் செய்யும் இந்திய நாட்டில் சட்டம் சாதிக்க வராது. மனமாற்றம் என்பது ஏதோ துறவிகளுக்கு மட்டும் என்று நீங்கள் சொல்வது பொருந்தாத வாதம். இந்த நாடு மறுபடியும் பாரதி கண்ட கனவு மாதிரி பாருக்குள் நல்ல நாடாக மிளிரும் என்ற நம்பிக்கை இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருவருக்கும் உண்டு. குறிப்பாக இங்கு வந்திருக்கும் அனைவரும் குடும்பக் கட்டுப்பாட்டில் தீவிரமாக ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கை தன்னம்பிக்கை எங்களுக்கு உண்டு.



சென்னை மூலகொத்தளம் பெரிய பாளையத்தம்மன் கோவில் பகுதி காலனியில் நடைபெற்ற குடும்பநலக் கலா நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு அரசு வருவாய்த்துறை பார்லிமெண்டரி செயலாளர் திரு. முசிறிபுத்தன் அவர்கள் தலைமைதாங்கி உரையாற்றுகிறார்.

# நடுவர் தீர்ப்பு!

[நடுவர் பேராசிரியர்—சாலமன் பாப்பய்யா அளித்த தீர்ப்பாவது:]

ரயில்வே பாலத்தில் ரயில் வருவதற்கு முன்பே கேட்டை சாத்தி விடுகிறார்கள். நாமும் செல்லாமல் நிற்கிறோம். ரயில் அதுபாட்டுக்குப் போகட்டும், நாமும் போகலாம் என்று இருக்கிறோம். அது சட்டம் போட்டு இருக்கிறார்கள். நாமும் பணிகிறோம்.

அலுவலகத்தில் வேலைக்கு 8 மணிக்கு வரவேண்டும் 12 மணிக்கு போக வேண்டும். மதியம் 2 மணிக்கு வர வேண்டும் 6 மணிக்குப் போக வேண்டும் என்று அதிகாரி கூறினால் சரி என்கிறோம். ஜனநாயக நாட்டில் 8 மணிக்குப் பதிலாக 10 மணி ஆக மாற்றவா சொல்கிறோம். ஆனால் ஒரு விதி இருக்கிறது அதற்குக் கட்டுப்படுகிறோம்.

கல்லூரி ஒன்பது மணிக்கு ஆரம்பம் என்றால் பெரும்பாலோர் 9 மணிக்கு வருகின்றனர். சிலர் 9 மணிக்குப் பின்னாலும் வருகின்றனர். அதற்காக ஒருவர் எனக்கு 9 மணிக்கு வரமுடியும் 9 மணிக்கு வருகிறேன். அவனுக்கு 10 மணிக்கு வரமுடியும் 10 மணிக்கு வரட்டும். ஜனநாயக நாட்டில் இதற்கெல்லாம் உரிமை தரக் கூடாதா? என்று கேட்டால் அதற்குச் சில வரையறை இருக்கிறது—அதற்கு கட்டுப்பட்டு ஆக வேண்டும்.

ஜனநாயக நாட்டில் அனைவருக்கும் வாகனங்கள் ஓட்டுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால், அதற்கு லைசென்ஸ் வாங்க வேண்டும் என்று சட்டத்தில் ஓர் தடை இருக்கிறது. சட்டங்கள் சில இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது. பிளாட்பாரத்திற்கு கீழ் நடக்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. யாரும் பிளாட்பாரத்திற்குக் கீழ் நடப்பதில்லை. மீறி நடந்தால் ஊர்தி ஏறி விபத்து ஏற்படுகிறது. முடிவு ஊர்தி ஓட்டுனருக்கே சாதகமாகி விடுகிறது. சட்டம் சிலருக்குச் சாதகமாகவும் சிலருக்குப் பாதகமாகவும் இருக்கிறது.


கே.ஜி.இராதாமணாளன் எழுதும்
தொடரோவியம்
"79"
சனவரி இதழில் ஆரம்பமாகிறது


169881

சட்டத்தை சில இடங்களில் மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். சில நேரங்களில் சட்டம் வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் குடும்ப நலச் சட்டம் பாருங்க இங்கேதான் ததுங்கினதம் போடுது. அங்கே சட்டம் வெற்றி பெற்றது சரிதான். இங்கே வெற்றி பெறுமா? இதுதான் கேள்வி.

மனித மனம் பாருங்க அதற்கு சக்தி அதிகம். அது என்னேரம் எப்படி இருக்கும் என்று சொல்ல முடியாது. இதில் சட்டத்தை வற்புறுத்தினால் நடக்காத காரியம். கொஞ்ச கொஞ்சமாக அவனுக்கு மனமாற்றம் கொண்டு வரணும்.

இது எப்படி முடிகிற காரியமா? 30 கோடி முகமுடையாள் இப்போது 60 கோடி முகமுடையாளாகி இருக்கிறாள். எவ்வளவோ காலமாக சொல்லி இருக்கிறோமே எவன் கேட்டான். யாரால் முடிகிறது? இது முடியலே.

சட்டம் போடலாம். ஆனால் அந்தச் சட்டத்திலும் ஓட்டைகள் இருக்கிறது. விதி விலக்கு இருக்கிறது. 2 குழந்தைகள் போதும் என்கிறோம். ஆனால் முஸ்லீம் ஒருவர் 5 திருமணம் செய்து கொள்ளலாம் என்று சட்டம் இருக்கிறது. அவருக்கு மட்டும் 10 குழந்தைகள் எனக்கு மட்டும் 2 குழந்தைகளா என்று கேட்பார்கள்.

சினிமா தியேட்டரில் 2½ மணிக்குக் காட்சி என்றால் 1½ மணிக்கு சென்று விடுகிறான். அங்கே சட்டத்தைக் கச்சிதமாக மதிக்கிறான். பின்பற்றுகிறான் ஆலயங்களில் பூஜைக்காக என்று ஒரு நேரம் இது தான் என்றால் அந்த நேரத்திற்குச் செல்லுகிறோம். பார்க்கிறோம். இதில் எல்லாம் வரையறைகளை பின்பற்ற முடிகிறதே.

ஆனால் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் சட்டத்தினால் பின்பற்ற முடியாது மனமாற்றத்தினால்தான் முடியும். சட்டத்தினால் பெரிய பூகம்பம் ஏற்பட்டிருக்கும். நமது நாட்டில் சமயத்தை சார்ந்தவர்களுக்கு என்று சில நம்பிக்கை உண்டு. இதற்கு மதிப்பு அளிக்கிறோம். அவர்களுக்கும் சட்டம் வற்புறுத்தினால் நடக்காது, அவர்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்றால் மனமாற்றத்தினால்தான் முடியும்.

மனமாற்றம் என்று சொன்னால் கிணறு எப்ப வெட்டுவது எப்போ தீயை அணைப்பது என்று கேட்கிறீர்களா? மனமாற்றம் என்பது கட்டுப்பாட்டினால்தான் ஏற்படுகிறது. நாட்டு மக்களை அறிவு பெறச் செய்ய வேண்டும்.

சட்டம் என்பது ஒரு நாட்டின் தேவைகளைப் பார்த்து நிலைமைகளை அனுசரித்து பெரியவர்கள் முடிவெடுக்கிறார்கள், இதுதான் வழி. இதைத்தான் செய்யனும் என்று அவர்கள் எழுதப்படாத சட்டமாக முடிவெடுக்கிறார்கள், அது என்னா செய்யுது. அரசு கூடி இதை எழுதுகின்ற சட்டமாக மாற்றுது. இது ஒரு பக்கம். எப்ப எழுதப்படாத சட்டம் இருந்தது: நாட்டிலே இருக்கக்கூடிய நிலைமையை அனுசரித்து ஒரு விதி செய்யறாங்க. முடிவு செய்யறாங்க இது சட்டமா மாறுது.

சட்டம் பெரிதும் துணைபுரிவது என்று வருகிறபோது மனமாற்றம் அடிப்படையாகிற்கும், வெற்றி பெறுவதற்கு நாட்டு மக்களிடையே சட்டம் இருக்கு, வலுவான சட்டம். ஆனா இது பெரிதும் வெற்றி பெறுனும்னா நீங்களும் நானும் மனம் மாறாமல் முடியாது—அதனாலேதான் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் சொன்னார்,

''திட்டம் போட்டு திருடுற கூட்டம்
திருடிக்கொண்டே இருக்குது
அதைச் சட்டம் போட்டு தடுக்கிற
கூட்டம் தடுத்துக் கொண்டே
இருக்குது''

திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாதுன்னு. நீங்களும் நானும் மனமாற்றம் ஏற்படலேன்னா நடக்காது.

வாழ்க்கையின் விதி இதுதான், தலைவிதி இதுதான் என்று நினைத்து 2-க்கு மேல் எப்போதும் வேண்டாம் என்று முடிவு எடுத்துச் செல்வோம் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நடுவர் தமது தீர்ப்பைக் கூறிய பிறகு, குடும்பநலக் கல்வி மற்றும் செய்தி அலுவலர் திரு. ஆர். இராமச்சந்திரன் நன்றி கூற, சூடான பட்டிமன்றம் சிறப்பாக முடிவுற்றது.

# Tamil Nadu Will Give A Lead By Further Achievement ?

Thiru Prabhudas B. Patwari
Governor of Tamil Nadu

159881

(Broadcast by Thiru Prabhudas B. Patwari, Governor of Tamil Nadu, on the eve of National Family Welfare Fortnight on 15th October 1978.)

Sisters and Brothers,

Population Explosion is one of the gravest problems that we are facing to-day. If is not only arresting the process of our economic growth, but also nullifies the progress that we have already made.

The population of India which was 439 million in 1961 and 548 million in 1971 has crossed 637 million in June 1978, according to the latest estimates. We are adding every year 12 million persons, equivalent to the population of Australia. The population of Tamil Nadu which was 34 million in 1961 and 41 million in 1971 has crossed 45 million now. The question is : How are we to meet the additional requirements of the growing population? We cannot possibly achieve the expected success in our health-care programme or, for that matter, other programme of socio-economic development, unless we are able to tackle the problem of population explosion.

Till the end of 1977—78, 28 million sterilisations were done in India and Tamil Nadu accounts for 28 lakhs sterilisation operations, which is the permanent method of Family Welfare Programme. But the performance after touching the peak level during 1976-77 has been low at the All-India level.

We have to achieve the expected levels of performance and thereby bring down the Birth Rate to 30/1000 population by 1982—83 at the all-India level. The protected Couple Coverage has to be stepped up. I may, in this connection, draw your attention to the statement made by the Prime Minister of India : He said: "I am distressed to know that in some cases, doctors were reluctant to under take sterilisation operations even though persons had voluntarily offered to undergo them. If doctors have any apprehensions of the possible enquiries being held in the event of cases resulting in complications, they should be assured that they would enjoy the same protection which the law affords to them in their profession except in those cases where there is proof of neglect of duty".

To meet the prevailing situation effectively, the Government of India have taken serious efforts recently. Raising the age of marriage for girls to 18and for boys to 21aspassed bythe Parliament recently was one such measure. The constitution of a Working Group on Population Dynamics by the Planning Commission is another welcome step. The Government of India have also decided to give 8% Central Assistance to the States based on the performance of the Family Welfare Programme and thus the assistance has been linked with the States' Performance in Family Welfare Programme. Recently, the Government of India have also announced National Awards under Family Welfare Programme. This National Programme is given the highest priority among all other Welfare Programmes.

Unless a well planned and co-ordinated effort is made from now onwards, it will not be possible to come anywhere near the levels of performance fixed for this State this year. The expected levels of performance for Tamil Nadu for 1978—79 are 2,76,700 sterilisations, 41,700 Intra Uterine Devices and 1,40,200 other Contraceptive users. All these steps are aimed at reducing the Birth Rate 30/1000 population by 1982-83.

With this object in view, it has been decided to organise National Family Welfare Fortnight throughout the country during the second fortnight of October this year. We have to make massive and intensive efforts through all the mass media at the disposal of the Central and State Governments to transform the Family Welfare Programme into a National movement, embracing all walks of life and all sections of society. Let us on this occasion, focus public attention on the consequences of Population explosion; explain to the people how the present situation threatens to affect the well being of every family and future of children; and secure increased acceptance of Family Welfare methods.

As a prelude, Orientation Training Camps for Opinion Leaders have already been taken up and are being conducted. These camps have proved quite useful in dispelling misgivings about the programme. In the words of our Prime Minister, "The Family Welfare Programme should receive full attention of all Departments and at all levels and should not be left only to the functionaries of Health and Family Welfare Departments".

In Tamil Nadu, more than 40,000 sterilisations have, so far, been performed in this year, accounting for nearly 30% of the expected level. This has been done without any compulsion and coersion at any level. May I express the hope that Tamil Nadu will continue to be in the forefront of this National Programme and give a lead by further achievements?

4:52:5 ... 28.8.8




மதுரை மாநகராட்சி மேயர் திரு. எஸ். முத்து அவர்கள் துவக்க உரையாற்றுகிறார்.




மாவட்ட ஆட்சித்தலைவரின் தனி உதவியாளர் திரு. மாயாண்டி தலைமையுரை நிகழ்த்துகிறார்.




மதுரை பாத்திமா பெண்கள் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் (திருமதி) சக்திபெருமாள் சிறப்புரையாற்றுகிறார்.









Printed and Published by S. GNANADESIKAN, M.D., Director of Medical Services and Family Welfare [Incharge]
at No. 49, Pantheon Road, Madras 600 008 — State Family Welfare Press, 79/81, Anna Salai, Madras-600006.
Editor : K. G. RADHAMANALAN, Assistant Editor : S. MUTHURAMALINGAM.